1. புகையிரதத் திணைக்களம், இலங்கைப் போக்குவரத்துச் சபை, மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு, தேசியப் போக்குவரத்து வைத்திய நிறுவகம், வீதிப் போக்குவரத்துக்கான தேசிய சபை , சிவில் விமாசேவைகள் அதிகாரசபை, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி, மற்றும் லக்திவ என்ஜினியர் அமைப்பு போன்ற நிறுவகங்களுடன் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான ஒருங்கிணைப்புக் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2. 2015 ஆம் ஆண்டு தொடர்பாக அமைச்சு மற்றும் உரிய நிறுவனங்களுடன் செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தலுக்கான முன் வேலைத்திட்டத்தினை நடாத்துதல் மற்றும் அச்செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

3. 2015 ஆம் ஆண்டு தொடர்பாக போக்குவரத்து மற்றும் சிவில் விமாசேவைகள் அமைச்சு அலுவலகத்தில் அமுற்படுத்தப்படும் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் இணைந்த திட்டத்தினைத் தயாரித்தல் தொடர்பாக பங்களிப்பினை நல்குதல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

4. அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் முன்னேற்ற மீளாய்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

5. பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழு மூலம் கலந்துரையாடும் காரணங்கள் தொடர்பாக இரு வாரங்களுக்கொரு முறை முன்னேற்றம், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை திணைக்களத்துக்கு அறிக்கையிடப்பட்டு அக்குறித்த நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

6. 2015 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு மதிப்பீட்டினைத் தயாரித்தலுக்கு நிறுவனங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அதன் கலந்துரையாடல்களில் பங்குகொண்டு கணக்குகள் பிரிவுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

7. 50 மில்லியனுக்கு அதிகமான போக்குவரத்து அமைச்சின் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினைக் கண்காணித்தல், அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் நிதி அமைச்சுக்கு முன்வைத்தல் (மொத்த கருத்திட்டங்களின் எண்ணிக்கை 33)

| | |
|---|---|
| ➢ அமைச்சினூடாக | - 1 |
| ➢ புகையிரதத் திணைக்களம் | - 25 |
| ➢ இலங்கைப் போக்குவரத்துச் சபை | - 3 |
| ➢ மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் | - 3 |
| ➢ தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுஹ | - 1 |
| | 33 |

8. பாராளுமன்ற பாதீட்டுக் குழுநிலை வாதத்திற்கு முன்வைப்பதற்கு அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களுக்குரிய முன்னேற்ற அறிக்கையினைத் தயாரித்து பாராளுமன்றத்திற்கு முன்வைத்தல்.

9. 2014 ஆம் ஆண்டின் இறுதியில் அமைச்சு அலுவலகத்தின் செயற்பாட்டு அறிக்கையினைத் தயாரித்து முன்வைத்தல்.

10. போக்குவரத்து அமைச்சின் கொள்முதல்∴தொழில்நுட்பக் குழுக் கூட்டங்களில் பங்குகொள்ளல் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

11. வெளிநாட்டு வளத் திணைக்களத்தினூடாக தொழில்நுட்ப உதவி அடிப்படையின் கீழ் அமைச்சுக்கு வழங்கப்படும் விசேட கற்கை ஆய்வுகள் மற்றும் அமைச்சினால் அடையாளங்காணப்பட்டு வரும் விசேட கருத்திட்டங்களைத் திட்டமிடுதல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

12. போக்குவரத்துஅமைச்சுக்குரிய இணையத்தளத்தினை அன்றாடம் நாளதுவரைப்-படுத்துதல்.

13. தேசிய தகவல் மையம் (1919) மற்றும் ஐஊவுயு நிறுவனத்துடன் இணைந்து போக்குவரத்து அமைச்சுக்கு உரித்தான தகவல்களைப் பரிமாறுதல் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக விரைவில் மறுமொழிகளை முன்வைத்தல்

14. ஏனைய நேர்வரிசை அமைச்சுக்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களினால் செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான உரிய கூட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களில் கலந்துகொண்டு தேவையான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

15. சனாதிபதி செயலகம் மூலம் சமர்பிக்கப்பட்ட பொதுமக்கள் முறையீடுகளுக்காக இணையத்தளத்தினூடாக துரிதமான விடைகளை முன்வைத்தல்.

16. இலங்கைப் போக்குவரத்து சபை மற்றும் பிரத்தியேகப் பேஷரூந்துக்களின் ஓட்டங்களை இணைத்து, நேர அட்டவணையின் பிரகாரம் இடம்பெறுவதற்கு உரிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

17. அலுவலகத்திலுள்ள பழைய ஆவணக் கோவைகளுக்கான பேரேட்டினை முறையாகத் தயாரித்தல் மற்றும் ஆவணக் கோவைகளைப் புதுப்பித்தல்.

18. போக்குவரத்து அமைச்சில் நூலகமொன்றை முன்னெடுத்துச் செல்லல்.

19. வடக்குப் புகையிரத மீள் அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு உரிய கருத்திட்ட அலுவலகங்களை ஒருங்கிணைப்புச் செய்து அக்கருத்திட்டங்களை அமுறப்படுத்தும் பணிகள் தொடர்பக பின் தொடர் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

20. மாத்தறை கதிர்காமம் புகையிரத பாதைகளை நிர்மாணிக்கும் கருத்திட்டத்துக்குரிய அலுவலகம் மற்றும் ஒருங்கிணைப்பு மேற்கொண்டு அக்குறித்த கருத்திட்டம் நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பாக பின்னூட்டற் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

21. தெற்கு அதிவேக மார்க்கத்தினை கொழும்பினை நோக்கி விரிவுபடுத்துவதற்கு பெருந்தெருக்கள் அமைச்சின் கருத்திட்ட செயற்குழுவினை பிரதிநிதித்துவப்படுத்துதல்.

22. சுற்றாடல் அமைச்சு இணைந்து பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல்.

- Nationally Appropriate Mitigation Action Plan on Transport Sector (NAMAS)
- வளிமண்டல நிலைமை முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச வேலைத்திட்டம் மற்றும் சூழல் நிலைபேறான போக்குவரத்துத் தொடர்பான ஆசியப் பிராந்தியங்களுக்கிடையேயான கருத்தரங்கு (BAQ&EST Conference)
- INDCs, CoP21

23. இலங்கை அரசினால் அனுசரணை காட்டப்பட்டு வரும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.

- SAARC/UNESCAP போன்ற சர்வதேச மகாநாடுகளுக்கு, உரிய போக்குவரத்துத் துறையில் இலங்கையினைப் பிரதிநிதித்துவத்திற்கான பணிகள் இடம்பெறுதல்.

24. அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களிற் கலந்துகொள்ளல் மற்றும் தீர்மானங்களை அமுற்படுத்தும் பின்னூட்டற் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

25. அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் மற்றும் கௌரவ அமைச்சரின் செய்திகளை முன்வைத்தல்.

26. வெளிநாட்டுப் பயிற்சி பாடநெறிகள் தொடர்பாகக் கலந்துகொள்ளும் உத்தியோகத்தர்களின் கற்கை ஆய்வினை முன்வைத்தல், ஒருங்கிணைத்தல். பேருந்து தரிப்பிட அபிவிருத்தி தொடர்பாக உரிய நிறுவனங்களுடன் கூட்ட ஒருங்கிணைப்பு, கூட்டங்களை நடாத்துதல் மற்றும் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்துதல்.

- பேருந்து தரிப்பிட அபிவிருத்தி

1. களுவரகஸ்வெவ பேருந்து தரிப்பிடத்தை நிர்மாணப் பணிகள் நிறைவு செய்தல்

2. காலி ஹபராதுவ பேருந்து தரிப்பிடத்தை நிர்மாணப் பணிகள் நிறைவு செய்தல்

27. பயணிகள் போக்குவரத்து துறை பயனுறுதி வாய்ந்த வகையில் அபிவிருத்திசெய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயணிகள் போக்குவரத்துச் சேவைக்காக Pre- Paid

Card முறை அறிமுகப்படுத்துவதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் கூடங்களை நடாத்துதல்

28. இலங்கைபோக்குவரத்து மற்றும் விமானசேவைத் துறைக்குரிய உத்தியோகபூர்வ எண்ணிக்கைளை கண்டறிவதற்காக கூட்ட ஒழுங்கமைப்பு, கலந்துகொள்ளல், மற்றும் குறித்த உத்தியோகபூர்வ எண்ணிக்கையிலான அறிக்கைகளை புள்ளிவிபர திணைக்களத்துக்கு கையளித்தல்.

29. ரஜ ரட்ட நவோதய. பொலன்னறுவை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஹிகுரக்கொட, மெதிரிகிரிய மற்றும் கதுருவெல பேருந்து தரிப்பிடத்தை நிர்மாணிக்கும் கருத்திட்டங்கள் உட்பட ஏனைய போக்குவரத்து மையத்திற்குரிய நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பொலன்னறுவை மாவட்டத்துக்குள் செயலாளர் அலுவலகத்துடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

30. போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சுக்குரிய நிறுவனங்களின் தரவுகளை சேகரித்து அரையாண்டு பொழிப்பு அறிக்கை தயாரித்தல்.

31. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு நோக்கத்திற்காக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சிற்குரிய நிறுவனங்களின் கருத்திட்டங்கள் தொடர்பாக தகவல்களைப் பெற்று உரிய மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்புவத்றகு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

32. மாநகர மற்றும் மேல் மாகாணம் அபிவிருத்தி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் மேல் மாகாண பிரதேச மாநகர திட்டத்தின் கூட்டங்களில் கலந்துகொள்ளுதல் மற்றும் அத்தகைய திட்டத்துக்காக போக்குவரத்து மற்றும் சிவில் விமாசேவைகள் அமைச்சின் பங்களிப்பு வழங்குதல்.

## 5. வருடத்துக்குள் விமான சேவைகள் பிரிவால் நிறைவேற்றப்படுகின்ற பணிகள்

1. விமான சேவைகள் கைத்தொழில் துறையின் முன்னேற்றத்துக்காக துறைக்குரிய அனைத்து நடவடிக்கைகளும் வினைத்திறன் மற்றும் விளைவுபெருக்க (சர்வதேச அங்கீகரிப்புக்காக ) நிறைவேற்றும்போது தேவைப்படும் சட்ட ஒழுக்குவிதிகளைத் தயாரித்தல், புதுப்பித்தல் மற்றும் செயற்படுத்துவதற்குத் தேவையான பங்களிப்பை வழங்குதல்.

2. இவ்வருடத்தின் சர்வதேச சாதகமான விமான சேரிடங்களைப் போன்று சாதகமான விமானப் பயணத் தடவைகளை அதிகரிப்பதற்காக அந்தந்த நாடுகளுடன் இருதரப்பு விமானசேவை பேச்சுவார்த்தைகள் நடாத்துதல் மற்றும் உடன்படிக்கையொன்றினை மேற்கொள்ளுதல்.

- ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்பட்ட நாடுகள்

பாக்கிஸ்தான், டென்சார்னியா, வங்காளம், மொரோக்கோ, ஓமான், டென்மார்க், நோர்வே, சுவீடன், துருக்கி, ருவாண்டா, நைஜீரியா, ஐக்கிய அரபு எமீர் குடியரசு, கம்போடியா

- புதிய ஒப்பந்தம்

ஒஸ்டிரியா

3. மட்டக்களப்பு உள்ளக விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக பங்களிப்பை வழங்குகின்ற இலங்கை விமானப்படை மற்றும் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு கருத்திட்ட தொழிற்பாட்டு நடவடிக்ககளை மேற்கொள்ளல்

4. பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காகவுள்ள வரையறுக்கப்பட்ட இட வசதிகளை அதிகரித்து மற்றும் விமான பயணிகளுக்கான வசதிகளை அதிகரித்து பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் இரண்டாம் கட்டம் இரண்டாவது நடவடிக்கை கட்டுமான பணிகள் கருத்திட்டத்தின் நிர்வாக ஒருங்கிணைப்பு மற்றும் கருத்திட்டத்தை தொழிற்படுத்துவதற்கு பங்களிப்பை வழங்குதல்.

5. அமைச்சின் கீழுள்ள தேசிய விமானசேவையான ரீலங்கன் விமானசேவை மற்றும் குறைந்த செலவுடைய விமானசேவையான மிஹின் லங்கா (தனியார்) கம்பனியிற்காக செய்யப்படும் மூலதன பங்களிப்பு 2014 வருடத்தில் பங்களிப்பு வழங்குவதற்கு தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளல். மேலும் அக்குறித்த முகமைத்துவ நடவடக்கைகளுக்காக வழிகாட்டல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள்

6. ஸ்ரீலங்கன் விமானசேவைக் கம்பனியின் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைமைப்படுத்தி இலாபம் உழைக்கும் நிறுவனமாக செயலாற்றுவதற்கு நிறுவனத்தின் ஐந்தாண்டு தொழில்முயற்சிகள் திட்டம் (Five Year Business Plan) புதுப்பிப்பதற்கு குறித்த மதியுரைக் குழுவிற்காக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

7. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு நடவடிக்கைகளுக்குள் அவற்றை வலுப்படுத்துவதற்குத் தேவையான சட்டங்கள், ஒழுங்கு விதிகளுக்காக தலையிட்டு அதிகாரம் வழங்குவதற்கு நடவடிக்கையெடுத்தல்.

8. விமான மையத்தினை நோக்கி செல்லும் பயணத்தில் அமைச்சின் விடய பரப்பிற்குரிய விமானசேவை அபிவிருத்தி நடவடிக்கைகள் ஏனைய வர்த்தக, அறிவு, வலுச்சக்தி கப்பல்துறை நிலையங்கள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட திட்டங்களுக்காக ஒத்துழைப்பை வழங்குதல்.

6. **2015 ஆம் ஆண்டின்போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் நிறைவேற்றப்பட்டுள்ள புலனாய்வுக் கடமை தொடர்பான விபரப் பொழிப்பு.**

| நிறுவனம் | இடம்பெற்ற ஆய்வுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1) போக்குவரத்து அமைச்சு | 04 |
| 2) இலங்கைப் போக்குவரத்துச் சபை | 04 |
| 3) புகையிரதத் திணைக்களம் | 06 |
| 4) தேசியப் போக்குவரத்து வைத்திய நிறுவகம் | 05 |
| 5) லக்திவ பொறியியலாளர் நிறுவனம் | 03 |
| 6) வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை | 03 |

## 7. புதிய புகையிரத வீதிகள் அபிவிருத்திப் பிரிவு

வினைத்திறன் மற்றும் இலாபகரமான போக்குவரத்துச் சேவையொன்றை வழங்குவதற்காக நிலைபேறான தேசியப் போக்குவரத்துக் கொள்கையொன்றைக் கட்டியெழுப்புவதன் தேவைப்பாட்டினை அடையாளங்காண்பதனூடாகப் பொதுப் போக்குவரத்திற்கு முன்னுரிமையளிப்பதுடன், தற்போது அதிகமாக பெருந்தெருக்கள் முறைமையினூடாக இடம்பெறுகின்ற பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து புகையிரத சேவைகளுக்கு பாதுகாப்பை வழங்கும் எதிர்பார்ப்புடன் ஆரம்பிக்கப்பட்ட புகையிரத வீதிகள் முறைமையினை மேம்படுத்தி நவீன புகையிரத வீதிகளை நிர்மாணிப்பதனூடாக நாட்டின் அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்கக்கூடிய வகையில் புகையிரத முறைமையொன்றை விரிவுபடுத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

### 7.1 மாத்தறை – கதிர்காமம் புதிய புகையிரத வீதி

பின்வருமாறு மூன்று கட்டங்களின் கீழ் நிர்மாணிப்பு நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு பிரேரிக்கப்பட்ட இவ் வீதியின் முழுமையான நீளம் 115 கி.மீ. ஆகும்.

| | **கட்டங்கள்** | **தூர அளவு (கி.மீ)** |
|---|---|---|
| I. | மாத்தறையிலிருந்து பெலிஅத்த வரை | 27 |
| II. | பெலிஅத்தவிலிருந்து ஹம்பாந்தோட்டை வரை | - |
| III. | ஹம்பாந்தோட்டையிலிருந்து கதிர்காமம் வரை | - |

இக்கருத்திட்டத்தின கீழ் தற்போது நிறைவு செய்யப்பட்ட செயற்பாடுகள்

- மாத்தறை நில்வள கங்கையினூடாக 100 மீற்றர் நீளத்தினைக் கொண்ட பாலமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதன் உட்கட்டமைப்பு அரசப் பொறியியலாளர் சபையினூ

டாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், பாகங்கள் ஒஸ்ரியாவிலிருந்து இறக்குமதி செய்து பொருத்தப்பட்டுள்ளது. பாலத்திற்காக செலவு செய்யப்பட்ட மொத்தப் பணம் ஷரூபா 263 மில்லியனாகும்.

- சூழற் காரணிகளை மதிப்பிடும் (EIA) அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மாத்தறையிலிருந்து பெலிஅத்த வரையான பகுதிக்கு உரிய அறிக்கை நாளதுவரைப்படுத்தப்பட்டுள்ளது.

- புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் தொல்பொருளியலை மதிப்பிடுகின்ற நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- முதலாவது கட்டத்தின் கீழ் புகையிரத வீதியினை நிர்மாணித்தல், மீளக் குடியேற்றுகின்ற நடவடிக்கைகள் மற்றும் மாற்று உட்புகும் வீதிகளை நிர்மாணிப்பதற்கு ஹெக்டயர் அளவினைக் கொண்ட காணி சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன் அகற்றப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை 188 ஆகும்.

- ஒப்படைக்கப்பட்டுள்ள காணி (துண்டுகளின் எண்ணிக்கை 1,513) - 96.0017 ஹெக்டயர் புகையிரத மார்க்கத்திற்காக சுவீகரிக்கப்பட்டுள்ள காணி - 83.6871 ஹெக்டயர்

- மீளவும் குடியேற்றுவதற்காக சுவீகரிக்கப்பட்டுள்ள காணி - 8.6388 ஹெக்டயர்

- மாற்று வீதியினை நிர்மாணிப்பதற்காக சுவீகரிக்கப்பட்டுள்ள காணி - 3.6758 ஹெக்டயர் (தியகக மொட்டாகெதர வீதி, தெல்கல்ல வீதி, தேவானந்த வீதி)

- ஏனைய நிர்மாணிப்புக்காக சுவீகரிக்கப்பட்டுள்ள காணி - 1.3609 ஹெக்டயர்

- மீளக் குடியேற்றுதல் நடவடிக்கைகளுக்காக 10 மாற்று காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன் 80 பேர்களுக்கு காணித்துண்டு வழங்கப்பட்டுள்ளது. உரிய காணிகளில் 42 வீடுகளின் நிர்மாணிப்புப் பணிகள் நிறைவு பெற்றுள்ளதுடன் மேலும் 02 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன

**மாற்று நிலத்தினை சுவீகரித்தல், அபிவிருத்தியினை மேற்கொள்ளல் மற்றும் பகிர்ந்தளித்தல்.**

| நிலத்தின் (காணி) பெயர் | நிலத்துண்டு களின் எண்ணிக்கை | பகிர்ந்தளிக்கப் பட்டுள்ள நிலத் துண்டுகளின் எண்ணிக்கை | இடம்பெற்ற அபிவிருத்திப் பணிகள் | நிர்மாணிக்கப் பட்ட வீடுகளின் எண்ணிக்கை | நிர்மாணிக்கப் பட்டு வருகின்ற வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| பள்ளியகுறுகே வத்தை | 35 | 27 | a | 14 | - |
| சில்வடெல் வத்தை | 25 | 17 | b | 05 | - |
| ஆச்சாரிகே வத்தை | 43 | 26 | b | - | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தங்கக வத்தை | 12 | 12 | b | - | - |
| பாளுவத்தை | 53 | 53 | b | 19 | 02 |
| சன்னாசிகே வத்தை | 25 | 20 | a | 01 | - |
| கறககேன | 26 | 10 | a | 04 | - |
| பண்சல காவ வத்தை | - | - | - | - | - |
| மகெதர வத்தை | 09 | 09 | b | - | - |
| றுக்அத்தனகக வத்தை | 13 | 06 | b | - | - |

a - வீதி தயாரிக்கப்பட்டு கொங்கிரிட் இடப்பட்டுள்ளது

b - நுழைவு வாயில்களின் ஆரம்பப் பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

c - நிலம் சுத்தஞ் செய்யப்பட்டுள்ளது.

d - அபிவிருத்தி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது

e - அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

- புகையிரத வீதியினை நிர்மாணிப்பதனால் அழிந்துபோகின்ற பொதுக் கட்டிடங்கள் மற்றும் வணக்க ஸ்தலங்களுக்காக மாற்றுக் கட்டிடங்களை நிர்மாணித்தல்

  a) சிறிபவக விஜயராம விகாரை - ரூ.8.5 மி

  b) வலஸ்கல களிமண் தொழிற்சாலை பணிநிறைவு - ரூ.9.0 மி

  c) வவிதத்த கனிஸ்ட பாடசாலைக் கட்டிடம் - ரூ. 8.0மி

  d) வவிறுகன்னல கனிஸ்ட பாடசாலைக் கட்டிடம்

  e) சமுர்த்திக் கட்டிடம், வவிறுகன்னல்ல - ரூ. 9.6 மி

- முதலாவது கட்டத்தின் நிர்மாணப் பணிகளுக்காக 2013.12.09 ஆந் திகதி சீனாவின் ஊஆஊ நிறுவனத்துடன் கடன் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளதுடன் தேவையான ஒதுக்கீடு கடன் முறைமையின் கீழ் சீனாவின் எக்சிம் வங்கியிலிருந்து பெறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2013.08.01 ஆந் திகதி சீனாவின் ஊஆஊ நிறுவனத்தினால் புகையிரதக் கருத்திட்டத்தின் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பின்வரும் நிர்மாணச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

**கருத்திட்டத்தின் கீழ் தற்போது இடம்பெற்று வருகின்ற நடவடிக்கைகள்.**

மாத்தறையிலிருந்து பெலிஅத்த வரையான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் புகையிரத வீதியின் நீளம் 26.75 கி.மீ. ஆகும். 2015.12.31 ஆந் திகதி வரையில் கருத்திட்டத்தின் நிர்மாணிப்புக்கு முன்மொழியப்பட்ட பௌதிக முன்னேற்றம் 92.98% ஆகும். அவ்வருட நிறைவில் எட்டப்பட்டுள்ள பௌதிக முன்னேற்றம் 53.88% ஆகும். பிரிவுகளாக எடுத்து நோக்குகையில் அக்கருத்திட்ட நிர்மாணப் பணிகள் வருமாறு.

| முன்மொழியப்பட்ட பணிகள் | நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட அளவு % | நிர்மாணிக்கப்பட்ட அளவு % |
|---|---|---|
| (டீ.கே.0+044~ டீ.கே.10+425) | | |
| ▪ சிறு பாலங்களை நிர்மாணிக்கும் செயற்பாடுகள் | 98% | 82% |
| ▪ புகையிரத வீதியினை நிர்மாணிப்பதற்கு குறுக்கு கடவைகளைத் தயாரித்தல். | 94% | 38% |
| ▪ புகையிரதப் பாலங்களை நிர்மாணித்தல் | 100% | 42% |
| ▪ நாகட்டியப் புகையிரதச் சுரங்கப் பாதையினை நிர்மாணித்தல் (606 மீ) | 80% | 55% |
| ▪ மேற்பரப்பில் குறுக்கு பாதைகள் கட்டமைப்பு | 100% | 0% |
| ▪ ரயில் நிலையங்கள், கட்டிடங்கள் அமைத்தல் | 89% | 0% |
| ▪ குறுக்கு ரயில் தடங்களின் கட்டுமானம் | 0% | 0% |
| (டீ.கே.10+425~ டீ.கே.19+840) | | |
| ▪ சிறு பாலங்களை நிர்மாணிக்கும் செயற்பாடுகள் | 100% | 85% |
| ▪ புகையிரத வீதியினை நிர்மாணிப்பதற்கு குறுக்கு கடவைகளைத் தயாரித்தல். | 95% | 40% |
| ▪ புகையிரதப் பாலங்களை நிர்மாணித்தல். | 96% | 47% |
| ▪ பம்பரகந்த ரயில்வே சுரங்கப்பாதை கட்டுமானம் (238ஆ) | 100% | 87% |
| ▪ மேற்பரப்பில் குறுக்கு பாதைகள் கட்டமைப்பு | 100% | 0% |
| ▪ ரயில் நிலையங்கள், கட்டிடங்கள் அமைத்தல் | 2% | 0% |
| ▪ குறுக்கு ரயில் தடங்கள் கட்டுமானம் | 20% | 0% |
| (டீ.கே.19+840~ டீகே.26+461) | | |
| ▪ சிறு பாலங்களை நிர்மாணிக்கும் செயற்பாடுகள் | 100% | 90% |
| ▪ புகையிரத வீதியினை நிர்மாணிப்பதற்கு குறுக்கு கடவைகளைத் தயாரித்தல். | 99% | 58% |
| ▪ புகையிரதப் பாலங்களை நிர்மாணித்தல். | 98% | 41% |
| ▪ மேற்பரப்பில் குறுக்கு பாதைகள் கட்டமைப்பு | 100% | 0% |
| ▪ ரயில் நிலையங்கள், கட்டிடங்கள் அமைத்தல் | 23% | 0% |
| ▪ குறுக்கு ரயில் தடங்கள் கட்டுமானம் | 100% | 0% |

**நிதிசார் முன்னேற்றம்**

இக்கருத்திட்டம் தொடர்பாக 2015 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட வெளிநாட்டு நிதயின் அளவு ரூபா. 11,300,000,000.00 ஆகும். உள்நாட்டு நிதியாக ஒதுக்கப்பட்ட அளவு ஷரூபா. 705,000,000.00 ஆகும் 2015.12.31 ஆந் திகதி வரையில் வெளிநாட்டு ரீதியில் ஒதுக்கப்பட்ட நிதி ரூபா. 2,792,362,301.14 செலவு செய்யப்பட்டுள்ளதுடன் அது மொத்த வெளிநாட்டு ஒதுக்கீடுகளின் 24.71% ஆகும். ஒதுக்கப்பட்ட உள்நாட்டு நிதியில், 2015.12.31 ஆந் திகதி வரையில் செலவு செய்யப்பட்ட நிதி ஷரூபா. 375,476,769.20 ஆகும். அது சதவீதத்தில் 53.25% ஆகும்.

## 7.2 களனிப் பள்ளத்தாக்குப் புகையிரத வீதியினை ஹம்பாந்தோட்டை வரை நீடிப்புச் செய்தல்.

முன்மொழியப்பட்ட இப்புகையிரத வீதியின் நீளம் 225 கி.மீ. ஆகும். சாத்தியவள சூழல் மதிப்பீட்டு ஆய்வினை மேற்கொள்ளும் ஒப்பந்தம் 2008/04/08 ஆந் திகதி மொரட்டுவப் பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அவ் அறிக்கையின் துணை அறிக்கை இஇப்போதைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், 2016.05.01 ஆந் திகதி இறுதி அறிக்கை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

## 7.3 குருணாகளை – ஹபரணை புதிய புகையிரத வீதி

முன்மொழியப்பட்ட இவ் வீதியின் மொத்த நீளம் 80 கீலோ மீற்றராகும். இப்புதிய புகையிரத வீதி தொடர்பான சாத்தியவள ஆய்வு, பொறியியலாளர் பணி தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகத்தினால் இடம்பெற்று வருகின்றது. சுற்றாடல் மதிப்பாய்வு அறிக்கை தயாரிப்பதற்காக பகிரங்க கேள்விப்பத்திர அழைத்தலுக்குத் தேவையான கொள்முதல் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு தற்போது நியமிக்கப்பட்டுள்ளது.

சூழல் மற்றும் சமூக மதிப்பீட்டு ஆய்வுக்கு, முன்மொழியப்பட்ட புகையிரத வீதியினை நிர்மாணிப்பதற்கு இனங்காணப்பட்டுள்ள 100 மீற்றர் அகல நிலப்பகுதியின் மத்திய கோடு அளவையாளர் திணைக்களத்தினூடாக புள்ளியிடப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு தொடர்பாக ரூபா. 10 மில்லியன் ஒதுக்கீடு இக் கருத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டு இருந்ததுடன், ரூபா. 508,161 நிதி மத்திய கோட்டினைப் புள்ளியிடுவதற்காக அளவையாளர் திணைக்களத்திற்கும் மற்றும் அரச பொறியியலாளர்கள் அமைப்புக்கும் வழங்கப்பட்டுள்ளன.சூழல் மதிப்பீட்டு அறிக்கையினைத் தயாரிப்பதற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு மீதியாகியுள்ளது.

## 7.4 ஹொரண – கொட்டாவ புதிய புகையிரத வீதி

ஹொரண பாணந்துறை புதிய புகையிரத வீதியின் சாத்தியவள ஆய்வு மொரட்டுவப் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டு இறுதி அறிக்கை 2013 நவம்பர் மாதம் கையளிக்கப்பட்டுள்ளது. அவ் ஆய்வு அறிக்கையின் பிரகாரம் இனங்காணப்பட்ட 03 மாற்றுவழிகளுக்கு கற்கை ஆய்வு இடம்பெற்றுள்ளது. அவை, ஹொரண – பாணந்துறை, ஹொரண - இரத்மலானை, ஹொரண – கொட்டாவ ஆகும். ஹொரண - கொட்டாவ

வீதியே அதில் சாத்தியமாக உள்ளது. முன்மொழியப்பட்ட இப் புகையிரத வீதியினை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று 2013.07.30 ஆந் திகதியன்று முன்வைக்கப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட புகையிரத வீதியினை நிர்மாணிப்பதற்கு முன்னர், பிரதேசத்தின் பெருந் தெருக்களைக் கவனத்திற் கொண்டு ஒட்டுமொத்த பிரதான போக்குவரத்துத் திட்டமொன்றை தயாரித்து அமைச்சரவைக்கு முன்வைக்கப்படுதல் வேண்டும் என அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டது. போக்குவரத்து அமைச்சின் ஜய்கா நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் ஹொரண கொட்டாவை உள்ளடக்கி கொழும்பு நகரத்திற்குத் தொடர்பான பிரதேசங்களுக்கு ஒட்டுமொத்தத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அத் திட்டத்தின் பிரகாரம் ஹொரண நகரத்தினை பெருந்தெருக்களால் மாத்திரம் கொழும்புக்குத் தொடர்புபடுத்துவதற்கு முன்மொழியப்பட்டது. இந்த கருத்திட்டத்தின எதிர்கால நடவடிக்கைகள் போக்குவரத்து அமைச்சின் திட்டமிடல் பிரிவுகள் மற்றும் மாநகர மற்றும் மேல்மாகாண பிரதேச அபிவிருத்தி அமைச்சுடன் கலந்துரையாடி ஒருங்கிணைந்து செயலாற்றி வருகின்றது.

### 7.5 மதவாச்சி – திருகோணமலை வரை புதிய புகையிரத வீதியினை நிர்மாணித்தல்.

முன்மொழியப்பட்ட இப்புகையிரத வீதியின் சாத்திவள கற்கை ஆய்வுப் பணிகள், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மனிதவள முகாமைத்துவ நிறுவனத்தினால் இடம்பெற்றுள்ளது. 2015 ஆம் ஆண்டுக்கு இக்கருத்திட்டம் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள பணம் ஷரூபா. 10 மில்லியனாக இருப்பதுடன், அமைச்சினால் அண்மையில் தயாரிக்கப்பட்ட புதிய புகையிரத அபிவிருத்தி திட்டத்தில் குறைந்தளவு முன்னுரிமை வழங்கப்பட்டிருப்பதனால் இந்த கருத்திட்டம் தொடர்பாக எதிர்கால நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

### 7.6 வெல்லவாய, பிபில ஊடாக பதுளை வரையில் புதிய புகையிரத வீதியினை நிர்மாணித்தல்.

இப்புதிய புகையிரத வீதி அம்பிலிபிட்டிய, மொனராகலை, அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் கதிர்காமத்தினை ஒன்றிணைத்து புதிய புகையிரத வலைப்பின்னலொன்றை நிர்மாணிப்பதற்கு முன் சாத்தியவள கற்கை ஆய்வுப் பணியினை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் பொறியியலாளர்கள் தொடர்பாக மத்திய ஆலோசனைப் பணியகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன், இற்றை வரையில் இடைக்கால அறிக்கை பெறப்பட்டுள்ளது. இவ்வறிக்கைக்கு அமைய இனங்காணப்பட்ட வீதிகள் தொடர்பாக முன்வைத்தல் 2014 திசம்பர் மாதம் அவர்களால் இடம்பெற்றுள்ளது. அதில் முன்மொழியப்பட்ட புகையிரத வீதியின் மத்திய கோடு தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதுடன், இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்குக் கவனத்தினைச் செலுத்தி இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. அவ் அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர் அமைச்சரவைக்கு சமர்பித்துபொருத்தமான முறைக்காக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2015 ஆம் ஆண்டு தொடர்பாக ஒதுக்கீடாக ஷரூபா. 10 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் ஆரம்ப அறிக்கைக்காக ஷரூபா. 436,735 பணம் வழங்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இடைக்கால அறிக்கைக்காக கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பணமாக ஷரூபா. 1,310,204.71 மில்லியனை வழங்கியுள்ளது.

### 7.7 மஹவ ஊடாக புத்தளம் வரையான புதிய புகையிரத வீதியினை நிர்மாணித்தல் (திருகோணமலை, மஹவ, புத்தள நகரத்தினை இணைப்பதற்கு)

முன்மொழியப்பட்ட இப்புகையிரத வீதியின், முன்னரான சாத்திய வள ஆய்வுச் செயற்பாடுகள் அமைச்சு மற்றும் புகையிரதத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களினால் இடம்பெற்று நிறைவு செய்யப்பட்டுள்ளது. இக் கருத்திட்டத்திற்கு 2015 ஆம் ஆண்டு தொடர்பாக ஒதுக்கீடாக ரூபா. 10 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், சாத்தியவள ஆய்விற்காக கேள்விப்பத்திரங்களை அழைத்துபொருத்தமான நிறுமொன்றை தேர்ந்தெடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 8. வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை

### 8.1 அறிமுகம்

1998 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க மோட்டார் வாகன திருத்தச் சட்டத்தினூ டாக போக்குவரத்து அமைச்சின் கீழ் காணப்படும் வீதிப் பாதுகாப்புக்கான தேசிய சபை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அனைவரையும் பாதுகாக்கக்கூடிய வீதி அமைப்புமுறையை ஏற்படுத்துதல் என்ற வாசகத்தை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் ஒரேயொரு அரச நிறுவனமாக திகழ்வது வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையாகும். இச்சபை தவிசாளர் ஒருவராலும் மற்றும் அரசு மற்றும் அரசாங்கமில்லாத 17 அமைப்புக்களினாலான பிரதி குழுவால் உள்ளடக்கப்படும்.

.மோட்டார் வாகனச் சட்டத்தின் 213 அ பிரிவில் இச்சபையின் கடமைப் பொறுப்பு காட்டப்பட்டுள்ளதுடன் 213 ஆ பிரிவினூடாக “வீதிப் பாதுகாப்பு நிதியம்” ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்நிதியத்திற்கு பாதுகாப்புச் சபை தமது மூன்றாவது கட்சியினரின் காப்புறுதித் தவணைக் கட்டணங்களிலிருந்து 1 % ஐ பங்களிப்புச் செய்கின்றது.

**தொலைநோக்கு**

“அனைவருக்கும் பாதுகாப்பான வீதி அமைப்புமுறை”

**குறிக்கோள்**

“வீதி விபத்துகளற்ற பாதுகாப்பான வீதி அமைப்புமுறையை உருவாக்குதல்”

### 8.2 வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் கடமைப் பொறுப்புகள்.

- அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களினுள் வீதிப் பாதுகாப்பு மற்றும் தொடர்புபட்ட பணியினை ஒருங்கிணைத்தல்

- அடையாளங்காணப்படாத வாகனங்களினால் விபத்துக்குட்பட்ட நபர்களுக்கு இழப்பீடுகள் வழங்குதல்.

- வீதிப் பாதுகாப்புத் தொடர்பான அறிவுப்பூர்வமான கருத்திட்டத்துக்கான பொறுப்பு ஏற்கின்ற அரச சார்பற்ற குறித்த நிறுவனங்களுக்கு அறிவு மற்றும் தகவல்களை வழங்குதல்.

- தரவுக் கழஞ்சியமொன்றை முன்னெடுத்துச் செல்லல்.

  I. மோட்டார் வாகன அளவு மற்றும் அவற்றின் தன்மைகளின் தொகுப்பு

  II. வீதி விபத்துக்கள்

  III. வீதி பாதுகாப்புத் தொடர்பான உள்நாட்டு மற்றும் சர்வதேச புள்ளி விபரங்கள்

- வீதிப் பாதுகாப்பு தொடர்பான நூலகமொன்றை கொண்டு நடாத்துதல்.

- ஒத்த சர்வதேச நிறுவனங்களுடன் உறவுகளை பேணுதல் மற்றும் அனுபவங்களுடனான அறிவை பகிர்ந்து கொள்ளுதல்.

- வீதிப் பாதுகாப்புத் தொடர்பான கருத்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயல்முறைப்படுத்துதல்.

- வீதிப் பாதுகாப்புடன் தொடர்புபட்ட கொள்கைகள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பாக அரசுக்கு ஆலோசனைகளை வழங்குதல்.

**8.3 2015 ஆம் ஆண்டினுள் வீதிப் பாதுக்காப்புத் தொடர்பான தேசிய சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்.**

**1. இனங்காணப்படாத வாகனங்களினால் விபத்துக்குள்ளான நபர்களுக்கான நஷ்டஈடு வழங்கும் கருத்திட்டம்**

- மோட்டார் வாகனச் சட்டத்தின் 213 அ பிரிவினூடாக காட்டப்பட்டுள்ள வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் பிரதான பணிகளில் ஒன்றாக, இழப்பீட்டுப் பிரேரணை முறைமையனைக் குறிப்பிட முடியும். இதில் அடையாளங்காணப்படாத வாகன விபத்தொன்றில் கடுங் காயங்கள் ஏற்படும் நபருக்கு ஷரூபா. 75000/- பணமும், இறந்த ஒருவருக்கு சொந்தமான சட்டரீதியான தங்கிவாழ்வோருக்கு ரூபா. 1000,000/- பணமும் இழப்பீடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், 2015.04.01 ஆந் திகதியின் பின்னர் ஏற்பட்ட அடையாளங்காணப்படாத வாகன விபத்தொன்றில் கடுங் காயங்கள் ஏற்படும் நபருக்கு ஷரூபா. 1000,000/- பணமும், உயிரிழந்த ஒருவருக்கு சொந்தமான சட்டரீதியான தங்கிவாழ்வோருக்கு ஷரூபா. 2000,000/- பணமும் வழங்குவதற்கு போக்குவரத்து அமைச்சரின் மற்றும் தேசிய சபையின் முடிவுக்கமைய அங்கீகரிக்கப்பட்டது.

- 2015 வருத்துக்காக வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் தலைமைத்துவத்தில் நஷ்டஈடு வழங்குதல் 03 கட்டங்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், முதலாவது கட்டம் 2015.03.18 ஆந் திகதி நடாத்தப்பட்டதுடன், இரண்டாவது நிகழ்ச்சித்திட்டம் 2015.04.23 என்ற திகதியிலும் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் வளாகத்தில் நடாத்தப்பட்டது.

- சர்வதேச பாதிக்கப்பட்டவர்கள் நாள் நினைவுகூறுதல்.

தேசிய சர்வதேச பாதிக்கப்பட்டவர்கள் தினம் சகல வருடங்களிலும் நொவெம்பர் மாதம் 03 ஆந் திகதி ஞாயிறு தினத்தன்று அனுஷ்டிக்கப்படுவதுடன், 2014 ஆம் ஆண்டில் நொவெம்பர் 16 ஆந் திகதி நெலும் பொகுண வளாகத்தினுள் வீதிப் போக்குவரத்து தொடர்பான தேசிய சபையின் வழிநடாத்தல் மூலம் வடமேல் மாகாணத்தில் பரந்து வாழ்கின்ற பாதிக்கப்பட்டவர்கள் அடிப்படையாகக் கொண்டு நினைவுகூறப்பட்டது. அத்தினத்தை நினைவுகூறும் 31 ஆவது நாடாக இலங்கை உருவாகியுள்ளது.

தேசிய சர்வதேச பாதிக்கப்பட்டவர்கள் தினத்துக்கு இணைவாக 2015.11.09 ஆந் திகதி போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் கௌரவ நிமல் சிறிபால டி சில்வா அவர்களின் ஆலோசனையின் பிரகாரம், வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் தவிசாளர் மருத்துவ சிசிர கோதாகொட அவர்கள் ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடல் நடாத்தினார்.

தேசிய சர்வதேச பாதிக்கப்பட்டவர்கள் தினத்தை நினைவு கூறப்படுகின்ற இரண்டாவது நிகழ்ச்சித்திட்டம் 2015 ஆம் ஆண்டில் நொவெம்பர் 15 ஆந் திகதி ஞாயிறு போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் கௌரவ நிமல் சிறிபால டி சில்வா அவர்களின் தலைமைத்துவத்தில் அனைத்து பயணிகள் போக்குவரத்துச் சேவைகள், ஊவுடீ சேவைகள், தனியார் பேருந்து சாரதி கழகத்தின் பிரதிநிதிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் (மோட்டார் வாகன பிரிவு) தாதியாளர்கள், தேசிய சபை அங்கத்தவர்கள், உட்பட சிறப்பான கௌரவத்துக்குப் பாத்திரமான விருந்தினர்கள் 600 பேரின் பங்களிப்புடன் ஆனந்த குமார சுவாமி மாவத்தையில் நகர மண்டபத்தில் 2015.11.15 ஆந் திகதி ஞாயிறு மிகவும் கோலாகலமான விதத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. அங்கு வாகன விபத்துகளுக்கு ஆளாகிய பாதிக்கப்பட்டோர் நினைவுகூறும் தினத்தன்று விஷேடமாக தயாரிக்கப்பட்ட 10 நிமிட குறுந்திரைப்படத்தின் வெளியீட்டு விழா இடம்பெற்றது.

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் கௌரவ நிமல் சிறிபால டி சில்வா அவர்கள் வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபைக்காக றறற.ளுசை டுயமெய சுழயன ளுயகநவல.உழஅ என்ற இணையதளம் தொடங்கிவைத்தார். .இதனூடாக பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளுதல் விஷேடமாக இருந்தது,

i. அரச மற்றும் அரச சார்பற்ற முகவராண்மை நிறுவனத்துடன் தேசிய வீதிப் போக்குவரத்து பாதுகாப்பு கொள்கைத் தொடர்பாக உறவுகளை கட்டியமைத்தல்.

ii. வீதி விபத்துகளை தவிர்ப்பதற்காக சட்டதிட்டங்களை தயாரித்தல் மற்றும் அமுல்படுத்துதல்.

iii. வீதிப் பாதுகாப்பு கொள்கையை மேம்படுத்துதல் மற்றும் தொழில்நுட்ப நிதியுதவிகளை வழங்குதல்.

iv. வீதி பாதுகாப்பு கொள்கை மேம்படுத்துவதற்காக பல்வேறு அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைளை நிறைவேற்றுதல்.

v. பொருளாதார தொழில்நுட்ப செயல்பாடுகள் மற்றும் சமூக ரீதியாக செயல்படுத்த முடியுமான தொழிற்பாடுகள் மற்றும் சுற்றாடலுக்கேற்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றுதல்.

2015 வருடத்தில் வாகன விபத்துகளினால் உயிரிழந்தோரில் தங்கிவாழ்வோர் மற்றும் அங்கவீனர்களுக்காக ரூபா 64 இலட்சம் நிதியுதவியும், 2014 ஆம் ஆண்டில் சர்வதேச பாதிக்கப்பட்டவர்கள் தினத்தன்று வருகைத்தந்திருந்த அங்கவீனர்களுக்காக இரண்டு இலட்சத்து பதினைந்தாயிரம் ஆன நிதியுதவியும் வழங்கப்பட்டது.

**2. வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை மூலம் புதிய நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்த தொடங்குதல்.**

➢ **தேசிய கொள்கையை நிறுவுதல்.**

- 2015.10.15 ஆந் திகதி போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர், கௌரவ நிமல் சிறிபால டி சில்வா அவர்களின் தலைமைத்துவத்தில் வாகன விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்காக தேசிய கொள்கை துரிதமாக வடிவமைப்பதற்கான சிறப்பு கூட்டம் அமைச்சின் திட்டமிடல்கள் பிரிவின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதற்காக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கௌரவ நிஹால் சோமவீர அவர்கள், வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் தவிசாளர், டாக்டர் சிசிர கோதாகொட அவர்கள், செயலாளர் சட்டத்தரணி சதுர உமகிலிய அவர்கள், பிரதி பொலிஸ் மாஅதிபர் (மோட்டார் வாகன) பி.டீ.ஏ.கே.சேனாரத்ன போன்ற அதிகாரிகள் உட்பட பல அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

- 2015.11.20 ஆந் திகதி ஜனாதிபதி செயலகத்தில் வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் தவிசாளர், டாக்டர் சிசிர கோதாகொட அவர்கள் மற்றும் ஜனாதிபதி அவர்களிடையே வீதி விபத்துக்களை குறைத்துக் கொள்வதற்காக தேசிய கொள்கையொன்றை தயாரிப்பதற்காக சிறப்பு கூட்டம் நடாத்தப்பட்டு எதிர்வரும் காலங்களில் வாகன விபத்துக்கள் இல்லாத நாடொன்றை உருவாக்குவதற்காக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக காரணங்கள் கலந்துரையாடப்பட்டன.

- 2016 ஆம் வருடத்துக்காக செயல்முறைத் திட்டத்தை தயாரித்தல் மற்றும் உலக சுகாதார அமைப்பின் 2011 2020, வீதிப் பாதுகாப்பு தசாப்தத்திற்கு இணைவாக 2016 – 2020 வருடங்களுக்கான தேசிய திட்டம் தயாரிப்பதற்காக 2015.12.11 ஆந் திகதி நாரஹேன்பிட்டி இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைமையகத்தில் விரிவுரை

மண்டபத்தில் சிறப்பு பட்டறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம் வாய்ந்த அதிகாரிகளை இணைத்து விஷேட செயலமர்வு இடம்பெற்றது.

➢ **உலக சுகாதார அமைப்புடன் இணைந்து நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பித்தல்**

இலங்கைக்குள்ளே வீதி விபத்துக்கள் அதிகரிப்பது, நாட்டிற்கு பெரும் சவாலாக இருப்பதனால் அதற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக சிறப்புக் கூட்டம் உலக சுகாதார அமைப்பின் இலஙகை பிரதி பேராசிரியர் ஜேக்கப் குமாரசன் அவர்கள் மற்றும் வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தவிசாளர், டாக்டர் சிசிர கோதாகொட அவர்கள், செயலாளர் சட்டத்தரணி சத்துர உமகிலிய அவர்கள், உலக சுகாதார அமைப்பின் நிகழ்ச்சித்திட்ட அதிகாரி (இலங்கை) டாக்டர் திருமதி லங்கா ஜயசூரிய திசாநாயக்க அவர்கள் உலக சுகாதார அமைப்பின் வெளிக்கல நிகழ்ச்சித்திட்ட அலுவலர் சுமுது ஹேவாசம் அவர்கள் உட்பட வீதிப் போக்குவரத்து தொடர்பான தேசிய சபையின் அதிகாரிகளின் பங்களிப்புடன் வீதிப் பாதுகாப்பு (2011-2020) திட்டத்திற்கு இணைவாக எதிர்வரும் ஐந்து வருட காலத்திற்காக பரந்தளவில் தேசிய கொள்கையொன்றை தயாரிப்பதற்காக இலங்கையில் அதிகளில் விபத்துக்கள் ஏற்படுகின்ற பாதைகளில் உள்ள குறைப்பாடுகளை கட்டுப்படுத்தும் அறிவியல் ரீதியாக மற்றும் சிறப்பு தொழில்நுட்ப அணுகுமுறையொன்றை தயாரித்துக் கொள்வதற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் 2016 தொடக்கத்தில் இருந்து முச்சக்கரவண்டி சாரதிகளுக்கு வீதிப் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளக் கூடியவாறான பாடநெறிகளை பயிலுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல் அவர்களின் மனப்பாங்குகளை .பயனுறுதி வாய்ந்த முறையில் மேம்படுத்துவதற்காக விஷேட நிகழ்ச்சித்திட்மொன்றை ஆரம்பிப்பதற்காக விஷேட நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டது

## 3. தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒலிபரப்பு நடவடிக்கைகள்

- 2015 வருடத்துக்குள் தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒலிபரப்பு நடவடிக்கைகள் நடாத்தப்பட்டது. அதற்காக வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் செயலாளர் சட்டத்தரணி சத்துர உமகிலிய அவர்கள் பங்கேற்று இணைந்து வீதிப் பாதுகாப்பு தொடர்பாக மற்றும் அதன் கடமைப் பொறுப்புகள் தொடர்பாகவும் ”பாதுகாப்பு எமது பொறுப்பாகும்”, வீதி விபத்துக்களற்ற நாடொன்றை கட்டியெழுப்புவது எவ்வாறென இங்கு விளக்கமளித்தார்.

- 2015.11.24 ஆந் திகதி சியத டிவி தொலைக்காட்சி அலைவரிசையூடாக வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் தவிசாளர், டாக்டர் சிசிர கோதாகொட அவர்கள், பிரதி பொலிஸ் மாஅதிபர் (மோட்டார் வாகன) அமரசிறி சேனாரத்ன அவர்கள், உலக சுகாதார அமைப்பு நிகழ்ச்சித்திட்ட அலுவலர் (இலங்கை) வைத்திய திருமதி லங்கா ஜயசூரிய திசாநாயக்க அவர்கள் கலந்துகொண்டு இலங்கைக்குள் விபத்துக்கள் அதிகளவில் ஏற்படுவதனைக் காணக்கூடியதாக இருப்பதனால் உலகளாவிய ரீதியில் ஒப்பிடும்போது எமது நாட்டின் அக்குறித்த விபத்துக்ளை கட்டுப்படுத்துவதற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான விழிப்புணர்த்தும் இநிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிறுவர்கள் நிகழ்ச்சித்திட்ட பிரிவின் 2015/11/05 ஆந் திகதி பாதிக்கப்பட்டவர்கள் நினைவு கூறும் நாள் தொடர்பாக வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் தவிசாளர், டாக்டர் சிசிர கோதாகொட அவர்கள், மூலம் பொது மக்கள் விழிப்புணர்த்தப்பட்டனர்.

- இலங்கை ஷரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஆயுபோவன் நிகழ்ச்சித்திட்டம், போக்குவரத்து மற்றும் சிவில் விமாசேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, அவர்களின் தலைமைத்வத்தில் நடாத்தப்பட்டது. அங்கு வீதி விபத்துக்கள் குறைப்பதற்காக கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி தெளிவுபடுத்தப்பட்டன.

- கௌரவ தவிசாளர், டாக்டர் சிசிர கோதாகொட அவர்கள், ரண்கிரி இலங்கை வனொலி சேவையில் “கடபத்த” நடப்பு நிகழ்வு திட்டத்துடன் இணைந்து வீதி விபத்துக்கள் மற்றும் அவற்றிலிருந்து தவிர்க்கும் வழிமுறைகள் தொடர்பான நேரடி நிகழ்ச்சித்திட்டம்..

**4. சைக்கிள்கள் மற்றும் கை டிராக்ட்டர்கள் (இழுவை இயந்திரம்) மீது பாதுகாப்பு பிரதிபலிக்கின்ற ஸ்டிக்கர்கள் ஒட்டும் நிகழ்ச்சித்திட்டம்**

- 2015.03.26 ஆந் திகதி சைக்கிள்கள் மீது பாதுகாப்பு பிரதிபலிக்கின்ற ஸ்டிக்கர்கள் ஒட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாம் கட்டம் மொனராகளை பொது நூலகம் முந்நிலையில் கௌரவ போக்குவரத்து அமைச்சரின் ஆலோனையின் பிரகாரம் ஆரம்ப வைபவம் நடாத்தப்பட்டதுடன், அதற்கு இணைவாக அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, கந்தளாய், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், காங்கேசந்துறை என்ற 103 பொலிஸ் பிரிவுகளில் அதே நாளில் செயல்படுத்துதல்

- துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

- செய்தித்தாள் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன.

**5. வீதிப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு**

➢ மோட்டார் விபத்துக்கள் தவிர்ப்பது தொடர்பாக அரசாங்க அதிகாரிளை விழிப்புணர்த்துதல்

- 2015.03.02 கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவசர விபத்து பிரிவு கேட்போர் கூடத்தில் விபத்துக்களை குறைப்பதற்காக தாதியர்களை விழிப்புணர்த்துதல்

- 2015.03.15 பிரதிபலிக்கின்ற ஸ்டிக்கர்கள் ஒட்டும் நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய பிரதி பொலிஸ் மாஅதிபர் (மோட்டார் வாகன ) மற்றும் பாதுகாப்பு பிரிவு மோட்டார் வாகன நிலையத் தலைவர்கள் விழிப்புணர்த்துதல்

- 2015.03.27 அரச அதிகாரிகள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் பிபிலை கலாச்சார மத்திய நிலையத்தில் நடாத்துதல்

- 2015.05.26 ஆந் திகதி தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான அமைச்சின் சாரதிகளை விழிப்புணர்வு மற்றும் வீதி விபத்துக்களின் பின்னர் வழங்கப்பட வேண்டிய முதலுதவி முறைகள் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், அங்கு பின்வரும் தலைப்புகளில் விரிவுரைகள் நடத்தப்பட்டன.

  - o வீதி விபத்துக்களின் தன்மை மற்றும் அவற்றினை தடுப்பதிலுள்ள முக்கியத்துவம்
  - o வீதி சட்டத்திட்டங்கள் தொடர்பாக அறிமுகம் மற்றும கடை பிடிக்கவேண்டிய விதங்கள்
  - o வீதி விபத்துகளின் பின்னர் வழங்கப்பட வேண்டிய திருத்தமான முதலுதவி முறைகள்

- 2015.06.08 ஆந் திகதி கொழும்பு மருத்துவமனையில் தாதியர் மற்றும் மருத்துவ அதிகாரிகள் விழிப்புணர்த்தும் மனப்பாங்கு மற்றும் திறன்களை அதிகரிப்பது தொடர்பாக அறிவு வழங்குதல்.

- பொத்துஹர பயிற்சி நிலையத்தின் 2015.06.18 ஆந் திகதி இபோச சாரதிகளை விழிப்புணர்த்துதல் மற்றும் சான்றிதழ்கள் வழங்குதல்.

- 2015.06.19 ஆந் திகதி கொழும்பு இபோசபையின் தலைமை அலுவலகத்தில் இபோச சாரதிகளை விழிப்புணர்த்தும் நிகழ்ச்சித்திட்டம் நடாத்துதல் மற்றும் வாகன விபத்தின் பின்னர் வழங்கப்படவேண்டிய முதலுதவி முறைகளைப் பற்றி அறிவைப் பெற்றுக்கொள்ளுதல்.

- 2015.07.09 ஆந் திகதி கொழும்பு இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் சாரதிகளை விழிப்புணர்த்துதல்

## ➢ முச்சக்கரவண்டி சாரதிகளை விழிப்புஊட்டல்

- தென் பிராந்திய அம்பாந்தோட்டை மாவட்டத்தை மையமாகக் கொண்டு 2015.02.27 ஆந் திகதி முச்சக்கரவண்டி சாரதிகள், மிதிவண்டிகள் மற்றும் தனியார் பேருந்து சாரதிகள் விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டம் அம்பாந்தோட்டை சிங்கப்பூர் மண்டபத்தில் நடைப்பெறல்.

- 2015.05.28 ஆந் திகதி அம்பாறை மாவட்டத்தில் உகனை பிரதேச மண்டபத்தில் முச்சக்கரவண்டி சாரதிகள் விழிப்பூட்டல் மற்றும் பரிசில்களை வழங்குதல்.

- 2015.06.21 கோகோ கோலா நிறுவனத்தில் சாரதிகள் விழிப்பூட்டல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்றது.

- 2015.06.26 பதுளை நகரசபை மண்டபத்தில் முச்சக்கரவண்டி சாரதிகளை விழிப்புணர்வு.

➢ **மோட்டார் வாகன விபதுக்ளை தவிர்ப்பதற்காக பாடசாலை சார்ந்த திட்டங்கள்**

- 2015 வருடத்துக்குள் பாடசாலை சார்ந்த திட்டங்களின் கீழ், தென் மாகாணத்தில் சூரிவெவ பாடசாலை மாணவர்கள், ஹம்பாந்தோட்டை வித்தியாலய பாடசாலை மாணவர்கள், ஆனமடுவ மத்திய கல்லூரி பாடசாலை மாணவர்கள், புத்தளம் கல்லூ ரி பாடசாலை மாணவர்கள், அம்பாறை-டி.எஸ் சேனாநாயக்க கல்லூரி பாடசாலை மாணவர்கள், அம்பாறை-பதியதலாவ தேசிய பாடசாலை மாணவர்கள், மற்றும் பண்டாரவளை மகா வித்தியாலயத்தில் பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டியதன் பின்னர் கேள்விகள் கேட்கப்பட்டு திறமைகள் உள்ள மாணவர்களுக்காக, பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

- ஐக்கிய நாட்டு அமைப்பினால் 2015 மே மாதம் 04 இலிருந்து மே மாதம் 10 ஆந் திகதி வரை வீதிப் பாதுகாப்பை நோக்காகக் கொண்டு குழந்தைகள் பாதுகாப்பு வாரமொன்று பிரகடனப்படுத்தியுள்ளது. இதற்கு இணைவாக போக்குவரத்து கௌரவ அமைச்சரின் ஆலோனையின் பிரகாரம் மத்திய மாகாண திரு முதல்வர் சரத் ஏக்கநாயக்க மற்றும் மத்திய மாகாண. போக்குவரத்து அமைச்சர் கௌரவ எதிரி வீரவர்தன அவர்களின் தலைமைத்துவத்தில் வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் வழிக்காட்டலின் கீழ் நிறுவப்பட்ட மத்திய மாகாண வீதிப் பாதுகாப்பு பிரிவால் வீதிப் பாதுகாப்பு வாரத்துக்குள் பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

**6. ஒளியுஸீடுருவிக் கருவி.(ீசழதநஉவழசள) விநியோகம்**

வீதி விபத்துக்களை குறைத்துக் கொள்வதற்காக நாடளாவிய நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்தும் விஷேட கடமைப்பொறுப்பு இலங்கை பொலிஸால் மேற்கொள்ளப்படுவதுடன், மோட்டார் வாகன பொலிஸ் மாஅதிபர் செய்த வேண்டுகோளுக்கமைய வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் வழிகாட்டுதலின் கீழ் 2015.04.23 ஆந் திகதி அமைச்சில் 09 பொலிஸ் பிரிவுகளுக்காகவும், அமைச்சு அலுவலகத்தின் அரச நடவடிக்கைகளுக்காகவும் மற்றும் 01 ஒளியூடுருவிக் கருவி உட்பட 10 ஒளியூடுருவிக் கருவிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

**7. விசேட கலந்துரையாடல்கள்.**

- 2015.02.10 சியச ஊடக வலையமைப்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடல்

- 2015.02.16 கணினி தரவுகள் அமைப்புமுறை நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்படுத்திக் கொள்வதற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடல்

- 2015.02.18 மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மற்றும் இலங்கை பொலிஸ் போன்ற நிறுவனங்களுடன் இணைந்து மோட்டார் வாகன செலுத்துகையுடன் தொடர்புடைய சட்டவிதிகள் தொடர்பிலான

கலந்துரையாடல்

- 2015.03.20 உள்ளக போக்குவரத்து அமைச்சர் கௌரவ ரஞ்சித் மத்தும பண்டார, அவர்களின் ஆலோனையின் பிரகாரம் வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் உறுப்பினர்களுடன் ஊடக கலந்துரையாடல்

- 2015.04.23 ஹொல்சிம் நிறுவனத்துடன் கலந்துரையாடல்

- 2015.05.18 சுவர்ணவாஹினி அலைவரிசை மூலம் திட்டங்களை செயல்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல்

- 2015.11.15 சர்வதேச பாதிக்கப்பட்டவர்கள் நாள் அனுஷ்டிப்பது தொடர்பாக நிகழ்காலத் தவிசாளர் டாக்டர் சிசிர கோதாகொட அவர்களுடன் ஊடக நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட நேர்முக பேட்டி

# II ஆவது பிரிவு

## அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் செயற்பாடு

# 1. இலங்கைப் புகையிரதத் திணைக்களம்

## 1.1 அறிமுகம்

2015 ஆம் ஆண்டில் தேசியப் போக்குவரத்து முறைமையினூடாக பயணிகள் மற்றும் சரக்குப் பொருட்களை ஏற்றியிறக்குதலைத் தொடர்ச்சியாக அமுற்படுத்தியதனூடாக இலங்கைப் புகையிரத சேவை, சிறந்த வகையில் அனைவரையும் நாட்டம் கொள்ளக்கூடிய வகையில் பங்களிப்பு நல்கியிருந்தமை திருப்தியளிக்கக்கூடிய பணியொன்றாகும். மிகவும் சிக்கனத்துடன் விளைதிறனாக, சௌகரியம் மற்றும் சிநேகபூர்வமான சூழலில் போக்குவரத்து ஊடகமொன்றாக ஏற்கப்பட்டு, புகையிரதப் போக்குவரத்துச் சேவையில் அதிக பயணிகள் மற்றும் சரக்குப் பொருட்களை ஒரே தடைவையில் ஏற்றியிறக்கி வீதிப் போக்குவரத்திலுள்ள தடைகளைக் குறைத்து, பல்வேறான சவால்களுக்கு முகங்கொடுத்து, அன்றாடம் உச்சளவிலான சேவையொன்றை வழங்குவதற்காகப் பங்களிப்பினை நல்கிய வண்ணமுள்ளது.

### தொலைநோக்கு

"தென் ஆசியாவிலேயே மிகவும் வினைதிறனான புகையிரதப் போக்குவரத்து வழங்குனர்களாக ஆக்குதல்."

### பணி

"பயணிகள் மற்றும் சரக்குப் பொருட்கள் போக்குவரத்திற்கான பாதுகாப்பு, நம்பிக்கைக்குப் பாத்திரம், குறிப்பிட்ட நேரத்திற்கு சேவையிலீடுபடுத்தி, சிக்கனமாகவும் மற்றும் வினைத்திறனாகவும் புகையிரதப் போக்குவரத்துச் சேவையொன்றை வழங்குதல்."

வடக்கில் பயங்கரவாதச் செயல்களினால் அழிந்துபோன புகையிரத வீதிகள், கட்டிடங்கள் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளை மீளவும் நிர்மாணித்து, ஒட்டுமொத்தப் புகையிரத வீதிகள் வலைப்பின்னலைப் புகையிரதப் போக்குவரத்துச் செயற்பாடுகளுக்கு ஒரே தடைவையில் பயன்படுத்துவதற்கு இயலுமாகவிருத்தல் 2015 ஆம் ஆண்டினுள் இலங்கைப் போக்குவரத்துச் சேவைக்கு கிடைக்கப் பெற்ற மிகப் பெரிய வாய்ப்பொன்றாகும். இது தொடர்பாக 2014 இறுதியில் வட புகையிரத வீதியின் யாழ்ப்பாணம் மற்றும் தலைமன்னார் வீதியின் மடு வரையில் புகையிரதச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதுடன், 2015 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டின்போது ஒட்டுமொத்தப் புகையிரத வீதிகள் வலைப்பின்னலில் புகையிரதச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு இயலுமாகவிருந்தது.

2015 ஆம் ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்த வருமானம் மற்றும் பயணிகள் போக்குவரத்தில் அபிவிருத்தி சார் போக்கு ஒன்றைக் காட்டுவதனூடாக 2014 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா. 5,909.31 மில்லியன் மொத்த வருமானம், 2015 ஆம் ஆண்டில் ரூபா. 6,334.26 மில்லியன் வரையில் காணப்பட்டதுடன் கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது 7 % முன்னேற்றமொன்றைக் காட்டியது. மேலும் 2014 ஆம் ஆண்டின் புகையிரதப் பயணிகள் மூலம் கிடைக்கப்

பெற்ற வருமானமான ரூபா. 4,950.8 மில்லியன், ரூபா.5,174.55 மில்லியன் வரையான 4% தால் வளர்ச்சி கண்டுள்ளது. இந்த சாதகமான நிலைமைக்கு அண்மையில் இறக்குமதி செய்யப்பட்டப் புகையிரத அதி வேகத் தொடர்களை, சன சந்தடி நிறைந்த உள்நகர, வெளிநகர சேவைக்கு ஈடுபடுத்துவதற்குக் காரணமாகியுள்ளது. புகையிரதம் தொடர்பில் உன்னதமான முறைமையில் பயணிகளின் நாட்டம், வடக்கு மற்றும் தலைமன்னார் புகையிரத வீதிகளை முழுமையான செயற்பாடுகளுக்குத் திறந்து விடுதல், புகையிரதப் பயணத் தடைவைகளில் அதிகரிப்பு ஏற்படுதல், காலவரையறையினுள் சனநெருசடி நிறைந்த உட்புற நகரங்களில் புகையிரதத்தினைச் சேவையில் ஈடுபடுத்துவதை அதிகரிப்பதற்கு இயலுதல், புகையிரதத்தினை இரத்துச் செய்வதனைக் குறைப்பதற்கு இயலுதல், புகையிரத அணி, சைகை மற்றும் மின்விளக்கு முறைமை, புகையிரத வீதியில் உரிய உட்கட்டமைப்பு வசதிகளைப் பேணுதல் மற்றும் மேம்படுத்துவதைத் தொடர்ந்து அமுற்படுத்துதல் போன்ற செயற்பாடுகள் இந்நிலைமை மீது தாக்கஞ் செலுத்திய பிரதான காரணியாகும். மேலும் இந்நிலைமையினை 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது பயணிகள் தொகை 11% த்தாலும் மற்றும் பயணிகள் கி.மீற்றரின் அளவு 9.5% த்தாலும் அதிகரித்தமை புகையிரதப் பயணிகள் செயற்பாடுகள் வினைதிறனான மேம்பாட்டுக்கு வழிகோலியுள்ளது.

- 2015 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்கு மேலதிகமாக அரசினால் அமுற்படுத்தப்பட்ட 100 நாள் துரித நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பின்வருமாறு குறிப்பிடப்பட்ட சில விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் அமுற்படுத்தப்பட்டு நிறைவு செய்வதற்கு இயலுமாகவிருந்தது.

  - புதிய புகையிரத மேடைகளை நிர்மாணித்தல் மற்றும் மேடைகளை உயர்த்துதல்
  - கம்புறுகமுவ, பொத்துகர மற்றும் வலிகம போன்ற புகையிரத நிலையங்களில் டுழழி டைநெ நிர்மாணித்தல்.
  - கம்புறுகமுவ, கீணவல, கல்லோய மற்றும் அகுன்கல் புகையிரத நிலையங்களில் பயணிகள் பாலங்களை நிர்மாணித்தல்.
  - தெரிவு செய்யப்பட்ட புகையிரத நிலையங்களில் பின்வருமாறு மேம்பாடு மற்றும் பராமரிப்புச் செயற்பாடகளை மேற்கொள்ளல்.

  - புகையிரத நிலையங்களுக்கு வர்ணப் பூச்சடித்தல்.
  - சிற்றுண்டிச்சாலை வசதிகளை உருவாக்குதல்.
  - மொபிட்டல் நிறுவனத்துடன் இணைந்து தொடர்பாடல் வசதிகளை ஏற்படுத்துதல்.

- புகையிதரம் மற்றும் புகையிரத நிலையங்களில் றுை –குை வசதிகளை ஏற்படுத்துதல்.

- கணனிமயப்படுத்தப்பட்ட புகையிரத ஆசனங்களை ஒதுக்கும் திட்டத்தினை புகையிரத நிலையங்களில் ஸ்தாபித்தல்.

- யாழ்ப்பாணம், அனுராதபுரம், மாத்தறை போன்ற புகையிரத நிலையங்களின் புகையிரதம் மற்றும் பேரூந்துச் சேவைகளை ஒன்றிணைத்து சேவைகளை ஆரம்பித்தல்.

- தன்னிச்சையான புகையிரதப் பாதுகாப்புக் கேற்றுக்களை ஸ்தாபித்தல்.

- புகையிரத நிலையங்களில் சுகாதாரச் சேவைச் செயற்பாடுகளை மேம்படுத்துதல்.

■ 2015 ஆம் ஆண்டின் இறுதியில் வடக்குப் புகையிரத வீதியின் மீள நிர்மாணிப்புச் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், கருத்திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம் தொடர்பிலான பொழிப்பொன்று பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| கருத்திட்டத்தின் பெயர் | மதிப்பிடப்பட்ட செலவு (அ.டொ.மி) | எதிர்பார்க்கப்பட்ட பௌதிக இலக்கு (தூரம் கி.மீ) | முன்னேற்றம் % | |
|---|---|---|---|---|
| | | | நிதி | பௌதிகம் |
| மதவாச்சியிலிருந்து மடு வரையான புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணித்தல். | 81.30 | 43 | 98 | கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| மடுவிலிருந்து தலைமன்னார் வரையான புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணித்தல். | 164.06 | 63 | 90 | கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| ஓமந்தையிலிருந்து பளை வரையான புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணித்தல். | 195.89 | 91 | 95 | கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| பளையிலிருந்து காங்கேசன்துறை வரையான புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணித்தல். | 154.60 | 56 | 88 | கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| வடக்குப் புகையிர வீதி தொடர்பில் சைகை மற்றும் மின் விளக்கு முறைமையினை ஸ்தாபித்தல். | 96.51 | 313 | 97 | கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |

## 1.2 செயற்பாட்டுக் காட்டி

| காட்டி | 2014 (மில்லியன்) | 2015 (மில்லியன்) |
|---|---|---|
| புகையிரதம் கி.மீ. | 11.08 | 11.79 |
| பயணிகள் புகையிரதம் கி.மீ. | 10.3 | 10.93 |
| சரக்குப் பொருட்கள் புகையிரதம் கி.மீ | 0.32 | 0.37 |
| பயணிகள் எண்ணிக்கை | 129.5 | 133.29 |
| பயணிகள் கி.மீ. | 6,841.97 | 7,407.18 |
| சரக்குகப் பொருட்கள் கி.மீ | 130.43 | *127.39 |
| சரக்குப் பொருட்கள் தொன் | 1.85 | *1.82 |

* மதிப்பிடப்பட்ட எண்ணிக்கைகள்

## 1.3 உட்கட்டமைப்பு வசதிகள்

### 1.3.1 புகையிரத வீதி முறைமை

நிரந்தர வீதிகள் முறைமையின் பராமரிப்புச் செயற்பாடுகள் மற்றும் மேம்படுத்துதல் தொடர்ந்து அமுற்படுத்தப்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் 155,615 அடி தண்டவாளம், 47,059 கற்காரைகள், 17,105 மரக்கட்டைகள் மற்றும் 9,424 பிளாஸ்ரிக் கியூப் பாவிக்கப்பட்டிள்ளது.

மேலும் புத்தளம் புகையிரத வீதியின் சீதுவவிலிருந்து கட்டுனாயக்க வரையான இரட்டைப் புகையிரத வீதியின் நிர்மாணிப்புச் பணிகள், களனிப் பள்ளதாக்குப் புகையிரத வீதியின் புனர்நிர்மாணச் செயற்பாடுகள் மற்றும் கண்டி – பேராதெனிய – கடுகண்ணாவ வீதியின் புனர்நிர்மாணச் செயற்பாடுகள் அமுற்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும் தென் களுத்துறையிலிருந்து தென் பயாகல வரையான இரட்டைப் புகையிரத வீதியின் நிர்மாணப் பணிகளை அமுற்படுத்துல் மற்றும் அதே போல புகையிரத நிலையங்களின் கட்டிடங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளது.

பெல்ஜியம் கடன் உதவியின் கீழ் புகையிரதப் பாலங்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் அவற்றை மீளமைத்தல் போன்ற செயற்பாடுகளும் புகையிரத உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தலின் கீழ் இடம்பெற்ற பிரதான பணிகளாகும்.

### 1.3.2 சைகை மற்றும் மின் விளக்கு முறைமை

சைகை முறைமையினைத் தொடர்ந்து பேணும் செயற்பாடுகள் மற்றும் மேம்படுத்துதல் வினைதிறனான புகையிரத சேவையொன்றை வழங்குவதன் மீது முக்கியமாகத் தாக்கஞ் செலுத்தியுள்ளது. 2015 ஆம் ஆண்டிலும் சைகை முறைமையின் மேம்பாடு மற்றும் பேணற் செயற்பாடுகள் தொடர்ந்து அமுற்படுத்தப்பட்டுள்ளதுடன் பின்வரும் செயற்பாடுகள் அவற்றுள் பிரதான இடம் வகிக்கின்றன.

- ஜாஎல – சீதுவ புகையிரத வீதி தொடர்பான சைகை முறைமையினை ஸ்தாபிப்பதற்கான செயற்பாடுகளை அமுற்படுத்துதல்.
- தன்னிச்சையான புகையிரதப் பாதுகாப்பு தடைகளை ஸ்தாபித்தல்
- அகுங்கல்ல புகையிரத நிலையம் தொடர்பில் புதிய சைகை முறைமையினை அமுற்படுத்துதல்.
- கடற்கரையோர வீதியில் சைகை முறைமையினை மேம்படுத்துதல்.

### 1.3.3 புகையிரத அணி

பழைய புகையிரத என்ஜின் பராமரிப்புச் செயற்பாடுகள் மற்றும் அது தொடர்பிலான உதிரிப்பாகங்கள் மற்றும் சேவைகள் வசதிகளைப் பெற்றுக் கொடுத்தலில் பாரிய கஸ்டங்களைச் சந்தித்தபோதும் வினைதிறனான புகையிரத சேவைவயை வழங்குவதற்காக புகையிரத அணியின் பழுதுபார்த்தல், பராமரிப்பு மற்றும் மேம்படுத்தல் செயற்பாடுகள் முறையாக இடம்பெற்றுள்ளன. தற்போது காணப்படும் புகையிரத என்ஜின்களில் 63 என்ஜின்கள் சேவைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் 67 அதிவேகத் தொடர்களும் ஓட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டு இறுதியில் 12,488 சிறிய பழுதுபார்த்தல்கள் மற்றும் 1,377 பிரதான பழுதுபார்த்தல்களையும் நிறைவு செய்வதற்கு முடிந்துள்ளது.

அதற்கு மேலாக 16 புகையிரதப் பெட்டிகள் புனர்நிர்மாணஞ் செய்யப்பட்டு சேவையில் ஈடுபடுத்துவதற்கு முடிந்துள்ளதுடன், ஓட்டச் செயற்பாடுகளிலிருந்து அகற்றப்பட்டிருந்த 06 புகையிரத என்ஜின்களை மீளவும் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதில் 02 புகையிரத என்ஜின் பரிட்சிப்பதற்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

## 1.4 நிதிசார் முன்னேற்றம்

| வருமானம்/செலவு | 2014 (ரூ.மி) | 2015 (ரூ.மி) |
|---|---|---|
| சாதாரண நுழைவுச் சீட்டுக்கள் | 3,942.30 | 4,163.71 |
| பருவகால நுழைவுச் சீட்டுக்கள் | 1,008.50 | 1,010.84 |
| பொதிகள் மற்றும் கடிதங்கள் | 140.20 | 153.29 |
| சரக்குப் பொருட்கள் மற்றும் கால்நடை வளங்கள். | 386.52 | 384.07 |
| பிற | 431.78 | 622.36 |
| **மொத்தம்** | **5.909.31** | **6.334.26** |
| செலவுகள் | | |
| மீண்டுவரும் செலவு | 16,943.26 | 14,048.78 |
| மூலதனச் செலவு | 36,436.05 | 30,436.25 |
| **மொத்தம்** | **53.379.31** | **44.485.02** |

# 2. மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

## 2.1 அறிமுகம்

இலங்கையில் பதிவு செய்யப்படாத மோட்டார் வாகனங்களை பதிவுசெய்வதற்காக 1928 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி மோட்டார் வாகனப் பதிவாளர் அலுவலகம் என ஆரம்பிக்கப்பட்ட இவ் அலுவலகம் 1951 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மோட்டார் வாகனச் சட்டத்தின் மூலம் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் என திணைக்களமாக உருவாக்கப்பட்டது. ,

### தொலைநோக்கு

"சிறப்பான மோட்டார் வாகன ஒழுங்குபடுத்தல் மூலம் மக்களின் உயர் பாராட்டைப் பெறுதல்"

### பணி

"ஊக்கப்படுத்தப்பட்ட பதவியினரின் கூட்டுமுயற்சியையும் நவீன தொழினுட்பத்தையும் ஈடுபடுத்துவதன் மூலம் மோட்டார் வாகனச் சட்டத்தையும் ஏனைய சட்ட ஒழுங்குவிதிகளையும் சிறப்பாகச் செயற்படுத்துவதன் மூலம் மக்களின் உயர்ந்த பாராட்டு பொருட்டு அர்ப்பணித்துச் செயலாற்றுதல்"

## 2.2 திணைக்களத்தின் செயற்பாடுகள்

திணைக்களத்தால் நிறைவேற்றப்படும் சேவைகள் பிரதானமாக 6 தொகுதிகள் மூலம் கீழே தரப்பட்டுள்ளவாறு மீளாய்வு செய்யலாம்.

### 1. புதிதாகப் பதியப்பட்டுள்ள செலுத்தக்கூடிய மோட்டார் வாகனங்கள்

2015.12.31ஆம் திகதி வரை புதிதாகப் பதியப்பட்டுள்ள வாகன எண்ணிக்கை 668,907 ஆகும்.

### 2. வாகன உடைமைமாற்றம் செய்யப்பட்டு பதியப்படுதல்

2015.09.31 ஆம் திகதி வரை உடைமைமாற்றம் செய்யப்பட்டு பதியப்பட்டுள்ள வாகன எண்ணிக்கை 417343 ஆகும்.

### 3. சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் சேவை

வேரஹர உபஅலுவலகத்தினை மையமாகக் கொண்டு ஏனைய மாவட்டங்கள் ஊடாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் செயற்பாடானது இரண்டு முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது. அவையாவன.

i. On line (நேரடித் தொடர்பு)

வேரஹர அலுவலகத்தினை மையமாகக் கொண்டு ஹம்பாந்தோட்டை, அனுராதபுரம், கம்பஹா, களுத்துறை, குருநாகல், மொனராகலை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ii. Off line (நேரடித் தொடர்பற்ற)

ஏனைய மாவட்ட அலுவலகங்களில் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் இச்செயற்பாடு பின்பற்றப்படுகின்றது.

4. **மோட்டார் வாகனங்கள் தொடர்பான தொழினுட்ப சேவைகள்**

5. **புகைக்கசிவு ஒழுங்குமுறைச் செயற்பாடு (சூழல் பாதுகாப்பு நோக்கத்திற்காக)**

6. **வீதிப் பாதுகாப்புப் பற்றிய செயற்பாடுகள்.**

## 2.3 செயற்றிறன் (2015 ஜனவரி – டிசம்பர்)

திணைக்களத்தால் நிறைவேற்றப்படும் செயற்பாடுகளின் முன்னேற்றம் மூன்று படிகளில் கீழே தரப்பட்டுள்ளவாறு மீளாய்வு செய்யலாம்.

1. வருடாந்தச் செயற்பாட்டுத் திட்டத்தின் உபாய மார்க்கச் செயற்றிட்டத்தின் முன்னேற்றம்

2. மூலதனத் திட்டத்தின் முன்னேற்றம்

3. மக்கள் சேவைகளில் முன்னேற்றம்

திணைக்களத்தின் செயற்றிறன் பயன்மிக்கதாகவும் சக்திமிக்கதாகவும் இருப்பதற்காகத் தேவையான வசதிகளை திணைக்கத்தினுள் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல்.

### 1. வருடாந்தச் செயற்றிட்டத்தின் உபாய மார்க்கங்களை செயற்படுத்தலின் முன்னேற்றம்

#### i. சாரதி நலன் புள்ளி வழங்கும் முறையினைச் செயற்படுத்தல்

2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மோட்டார் வாகனச் சட்டத்திற்கு அமைவாக இலங்கையில் செலுத்தப்படும் வாகனத் தொகுதிகள் மற்றும் வீதிப் பாதுகாப்பை உறதிப்படுத்து முகமாக வினைத்திறன்மிக்க சாரதிகளை உருவாக்கும் நோக்காக சாரதி நலன் புள்ளி வழங்கும் முறையினை இலங்கை பூரா செயற்படுத்துவதற்கு திட்டமுள்ளதுடன் முன்னோடித் திட்டமாதிரி கொழும்பு நகரினை மையப்படுத்தி செயற்படுத்தப்படும்.

ii. **ஈ-மோட்டார் செயற்றிட்டம்**

அறிக்கைகளின்படி செயற்படுத்தப்படும் இச்செயற்றிட்டம் இதுவரை பல கட்டங்களைத் தாண்டியள்ளதுடன் இந்நோக்கமானது திணைக்களத்தின் சேவைகளை வழங்கும்போது பயன்படுத்தப்படுகின்ற கோப்புக்களை பிரதியெடுத்து அவற்றின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதில் திணைக்களச் செயற்பாடுகள் இலகுபடுத்தப்படுகின்றன. இதுவரை செயற்றிட்டத்தை செயற்படுத்துவதற்காக உரிய ஆவணக் கோப்புகள் திருத்தங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் ஆலோசனைச் சேவைகள் ஐஊவுயு நிறுவனம் மூலம் வழங்கப்படும்.

**2. வரவுசெலவுத் நிதயேற்பாட்டில்செயற்படுத்தப்படும் மூலதனச் செயற்றிட்டங்களின் முன்னேற்றம்**

திணைக்களத்தில் செயற்படுத்தப்படும் உயர் மூலதனச் செயற்றிட்டங்களான

- தலைமை அலுவலக நிர்மாணச் செயற்பாடுகள்
- வேரஹர உபஅலுவலக நிர்மாணச் செயற்பாடுகள்
- மாவட்ட அலுவலங்களில் நிர்மாணச் செயற்பாடுகள்
- மனிதவள முகாமைத்துவத்திற்காக பயிற்சி வேலைத்திட்டம் செயன்முறைப்படுத்தல்
- சாரதி அனுமதிப் பத்திர அச்சிற்கான செலவிடப்பட்ட கட்டணம்

■ **தலைமை அலுவலகத்தில் நிர்மாணம்**

நாரஹேன்பிட்டி தலைமை அலுவலகத்தின் நிர்மாணச் செயற்பாடுகள் இதன் கீழ் கருதப்படுவதுடன் இச்செயற்பாட்டில் 3 ஆம் கட்ட நடவடிக்கை நடைபெறுகிறது. இந்நிர்மாணச் செயற்பாட்டிற்காக ரூபா 10 மில்லியன் மானியநிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

I. கார் கிளையினை நவீனமயமாக்கல் பணிகள்

II. இடித்து அகற்ற வேண்டிய கட்டிட நவீனமயமாக்கல் பணி

III. சுகாதாரத் தொகுதியினை திருத்தம் செய்தல்

■ **வேரஹர உபஅலுவலகத்தின் நிர்மாணப் பணிகள்**

ரூபா 236 மில்லியன் செயற்றிட்டத்தில் கட்டுமானப் பணிகள் திட்டமிடப்பட்டாலும் 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 75 மில்லியன் பெறுமதியான செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இதுவரை அதற்காக ரூபா 2.10 மில்லியன் அளவில் பணம் செலவிடப்பட்டுள்ளது. இப்பணியானது 02 கட்டங்களாக நடைபெறும். அதாவது

- சாரத்தியப் பயிற்சிக்கான பாதை அமைத்தல் – ரூபா 78.96 மில்லியன்
- வாகனத் தரிப்பிடம் – ரூபா 78.96 மில்லியன்

■ **மாவட்ட அலுவலகங்களின் நிர்மாணப் பணிகள்**

பொதுமக்களிற்கு மிகவும் விரிவான வினைத்திறன்மிக்க சேவைகளை வழங்குதலை பிரதான நோக்காகக் கொண்டு செயற்படும் எமது திணைக்களம் இதுவரை இலங்கை முழுவதும் உள்ள மாவட்ட அலுவலகங்களில் வலையமைப்பு ஊடாக அவசியமான தேவைகளை வழங்குவதை முதன்மைப் பணியாக கொண்டுள்ளது.

அம்மாவட்ட அலுவலகங்கள் ஊடாக சாரதி அனுமதிப் பத்திரத்திற்கான விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ளல், அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு வேண்டிய ஆவணங்கள் மற்றும் நடைமுறைகளை பரிசீலனை மேற்கொள்ளப்படும். குருநாகல், கம்பஹா, களுத்துறை, ஹம்பாந்தோட்டை, அனுராதபுரம், மொனராகலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட அலுவலகங்கள் ஊடாக இணையம் மூலம் கணனி நேரடித் தொடர்பு (online) வசதிகள் வழியாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவது தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஏனைய மாவட்ட அலுவலகங்களில் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குதலில் (offline) நேரடித் தொடர்பற்ற முறை பின்பற்றப்படுகின்றது.

மாவட்ட அலுவலக நிர்மாணம் மற்றும் நவீன மயமாக்கற் பணிகளிற்காக இந்த வருடம் ரூபா 60 மில்லியன் மானிய நிதி ஒதக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூபா 13.32 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாவட்ட அலுவலகங்களின் நிர்மாணம் மற்றும் நவீனமயமாக்கல் பணிகள் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

- **திருகோணமலை மாவட்ட அலுவலக நிர்மாணப் பணி**

இதற்காக ரூபா 69 மில்லியன் செலவிடப்பட்டு 80% மான கட்டிட கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன.

- **களுத்துறை**

இதற்காக ரூபா 4.1 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மாவட்டச் செயலகம் ஊடாக ஒப்பந்தகார்ர்கள் விலைமனுக்கோரல் அழைப்பு விடுவிக்கப்பட்டு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடம் நவீனமயமாக்கல் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. .

- **கண்டி**

இணையம் மூலம் கணனி நேரடித் தொடர்பு (ழடெடைநெ) வசதிகள் இணைப்பினை வழங்குவதற்கான அலுவலக நவீனமயமாக்கல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக ரூபா 2.9 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

- **வவுனியா**

ரூபா 0.9 மில்லியன் செலவில் வ்வுனியா மாவட்ட அலுவலகம் மற்றும் மோட்டார் வாகனப் பரிசீலனைக்கான உத்தியோகபூர்வ இல்லத்தினை திருத்தம் மேற்கொள்ளப்பாட்டுள்ளது. .

- **அனுராதபுரம்**

ரூபா 1.4 மில்லியன் செலவில் மாவட்ட அலுவலகம் மற்றும் மோட்டார் வாகனப் பரிசீலனைக்கான உத்தியோகபூர்வ இல்லத்தினை திருத்தம்மேறகொள்ளப்பட்டுள்ளது.

- **மட்டக்களப்பு**

ரூபா 0.88 மில்லியன் செலவில் மாவட்ட அலுவலகம் நவீனமயமாக்கல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பாட்டுள்ளது.

- **மனிதவள முகமைத்துவத்திற்கான பயிற்சி வேலைத்திட்டத்தினை செயற்படுத்தல்**

திணைக்களத்தில் சேவைபுரியும் ஊழியர்களின் தரம் மற்றும் வினைத்திறன் என்பவற்றிற்காக எமது திணைக்களம் மேம்பட்ட உற்பத்தித் திறனை நோக்கிச் செல்லும் பயணத்தில் பணியாளர் ஊக்கப்படுத்தல் சிறந்த்தொரு அடித்தளமாகும். இதற்காக ரூபா 2.5 மில்லியன் மானிய நிதியினை இந்த வருடத்திற்காகப் பெற்றுள்ளதுடன் அதில் ரூபா 0.84 மில்லியன் இதுவரை செலவிடப்பட்டுள்ளது. அதன்படி வருட முடிவில் 15 பயிற்சி வேலைத் திட்டங்கள் மூலம் 87 ஊழியர்கள் பயிற்சி வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

## 3. மக்கள் சேவைகளில்

| | பணி | 2015.12.31 |
|---|---|---|
| 01 | சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான எழுத்துப் பரீட்சையை நடாத்துதல் | 94,672 |
| 02 | சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான செயன்முறைப் பரீட்சையை நடாத்துதல் | 78,029 |
| 03 | இலக்கத்தகடுகளை வழங்குதல் (கொழும்பு) | 493,729 |
| 04 | இலக்கத்தகடுகளை வழங்குதல் (வெளி மாவட்டங்கள்) | 176,642 |
| 05 | கராஜ், புதிய வர்த்தக நிறுவனங்களைப் பரிசீலனை செய்தல் | 250 |
| 06 | கராஜ், புதிய வர்த்தக நிறுவனங்களைப் பதிவு செய்தல் | 224 |
| 07 | கராஜ், புதிய வர்த்தக நிறுவனங்களைப் புதுப்பித்தல் | 760 |
| 08 | சாரத்தியப் பாடசலைகளைப் பரிசீலனை செய்தல் | 73 |
| 09 | மாதிரிப் படிவங்களை வழங்கல் | 302 |
| 10 | ஊஆவு, ஸசி இலக்கங்ளை வழங்கல் | 1,603 |
| 11 | இழுவை அடிச்சட்டக இலக்கங்ளை வழங்கல் | 2,394 |

| | | |
|---|---|---|
| 12 | சுங்க ஏலவிற்பனை வாகனங்களிற்கான ஊஆவு அடிச்சட்டக இலக்கங்ளை வழங்கல் | 42 |
| 13 | மோட்டார் சைக்கிள்களை பரிசீலனை செய்தல் | 1,313 |
| 14 | புதிய மோட்டார் சைக்கிள்களை கணனியில் பதிவு செய்தல் | 264,390 |
| 15 | நிறைச் சான்றிதழ் வழங்குதல் | 9,091 |
| 16 | அடையாளச் சான்றிதழ் வழங்குதல் | 1,422 |
| 17 | தடை உத்தரவு வழங்குதல் | 1,661 |
| 18 | தடை உத்தரவினை நீக்குதல் | 1,538 |
| 19 | வாகன விபத்துக்களைப் பரிசீனை செய்தல் | 4,577 |
| 20 | விசேட கடமைகளில் பங்குபற்றுதல் | 322 |

## 2.4 2015 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுசெய்யப்பட்ட வருமானம் மற்றும் உணமையான வருமானம்.

| வருமான விபரம் / வருமானத் தலைப்பு | 2015 மதிப்பிடப்பட்ட வருமானம் ரூ மில்லியன் | 2014.12.31 உண்மையான வருமானம் ரூ மில்லியன் | 2015.12.31 உண்மையான வருமானம் ரூ மில்லியன் |
|---|---|---|---|
| சொகுசு மோட்டார் வாகன வரி | 1200.00 | 1122.81 | 1306.50 |
| மோட்டார் வாகன விற்பனை வரி | 56.00 | 50.96 | 63.56 |
| மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் அறவிடப்படும் கட்டணம் | 6700.00 | 7877.12 | 9345.86 |
| சுங்கவரிச் சலுகை அனுமதிப் பத்திரத்தின் கீழ் அறவிடப்படும் கட்டணம். | - | - | 1218.95 |
| **மொத்த வருமானம்** | **7956.00** | **9050.89** | **11934.86** |

ஆதாரம் : மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

திணைக்களம் ஈட்டிய மொத்த வருமானத்தைக் கவனத்திற் கொள்ளும்போது மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் அறவிடப்படும் வரி மூலமாகப் பெற்றுக்கொள்ளப்படும் வருமானமானது 78.67மூமாக உயர்பெறுமானத்தைக் கொண்டுள்ளதுடன் மோட்டார் வாகன விற்பனையின் கீழ் அறவிடப்படும் வரியின் பெறுமதி வருடத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தின் 59.7% இனை அடைந்துள்ளதைக் காட்டுகின்றது. 2014.12.31 திகதியின் மொத்த வருமானத்துடன் ஒப்பிடும்போது 2015.08.31 ஆம் திகதியில் உள்ள வருமானம் 31.86% இனால் அதிகரித்துள்ளது.

**செலவினம்**

| **செலவின விபரம் / செலவினத் தலைப்பு** | **2015 மதிப்பிடப்பட்ட செலவினம் ரூ மில்லியன்** | **2014.12.31 உண்மையான செலவினம் ரூ மில்லியன்** | **2015.12.31 உண்மையான செலவினம் ரூ மில்லியன்** |
|---|---|---|---|
| மீள்வரும் செலவினம் | 12361.01 | 1463.45 | 2217.64 |
| மூலதனச்செலவினம் | 1240.98 | 922.54 | 1189.67 |
| **மொத்தச் செலவினம்** | **3601.99** | **2385.99** | **3407.31** |

ஆதாரம் : மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

# 3. இலங்கை போக்குவரத்துச் சபை

## 3.1 அறிமுகம்

இலங்கையில் மக்கள் போக்குவரத்துச் சேவை மூலம் அரச துறை நிறுவகங்களில் முன்னணியிலுள்ள இ.போ.ச ஆண்டுதோறும் தினமும் மக்கட்கு சேவைபுரியும் நிறுவகங்களில் முக்கிய இடத்தை வகிக்கிறது.

**தொலைநோக்கு**

“பிராந்தியத்தின் அதி சிறந்த பயணிப் போக்குவரத்தாளர்.”

**பணி**

“பொது மக்களுக்கு பாதுகாப்பான, நம்பத்தகுந்த, வசதிகளுள்ள வீதிப்பயணிப் போக்குவரத்துச் சேவையை நியாயமான கட்டண முறையின் கீழ் சேவை அர்ப்பணிப்புடன் செயலாற்றும் உற்பத்திவளமிக்க பணியாளரின் மூலம், சகல வளங்களையும் உச்ச நிலையில் பயன்படுத்தி பெற்றுக்கொடுத்து, பொருளாதார ரீதியில் சமநிலையைப் பேணும் நிறுவகமாக இயங்கல்”

## 3.2 சமூக நன்மைக்கு இ.போ.சவின் பங்களிப்பு

- **விடியற்காலை முதல் பிந்திய இரவு கடைசி பயணங்கள் செயலாற்றல்.**

இலங்கையின் பிரதேசங்கள் யாவும் அடங்கலாக விடியற்காலை முதல் பிந்திய இரவு கடைசிப் பயணங்களையும் சேவையாற்றுவதன் மூலம் நாட்டின் பொருளாதார பங்களிப்பிற்கு முதுகெலும்பாக விளங்குகிற பணியாளர்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றுவதில் இ.போ.ச ஆற்றும் சேவைகளினால் கடந்த காலங்களிலிருந்து அதற்கு ஏற்பட்ட நட்டம் சொல்லுந்தரமன்று. ஆயினும் இ.போ.ச சமூக பொறுப்பெனக் கருதி இச் சேவைகளையாற்றி வருகிறது.

- **கிராமிய பஸ் சேவை செயலாற்றல்**

கிராம பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக கிராமங்களையும் நகரங்களையும் இணைக்கும் இ.போ.ச வின் பங்களிப்பு எத்தகையதென்றால், வருவாயற்ற வழிகளில் செயலாற்றுவதன் மூலம் ஏற்படும் நட்டத்தையும் பொருட்படுத்தாது இ.போ.ச இச்சேவைகளை ஆற்றிவருகிறது என்பதேயாகும். இதற்கேற்ப கடந்த ஆண்டுகளில் கொள்வனவு செய்த 281 சிறிய பஸ்கள் பயன்படுத்தப்பட்டு கிராம வழிச் சேவைகளைப் பலப்படுத்தும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் சிறிய பஸ்களை கொள்வனவு செய்து இச்சேவைகளை மேலும் வலுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கையை இந்நாட்டின் பொருளாதார சுதந்திரத்திற்காக மேற்கொள்ளப்படும் சேவையாகக் கருதலாம்.

■ **பாடசாலை சேவை பஸ் செயலாற்றல்**

இ.போ.ச தாங்குகின்ற பழு நாளைய எதிர்காலத்தில் சமூக பயன்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும் இதன்படி நெருக்கடியுள்ள, வருவாய் தரும் செயலாற்றல் சந்தரப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளாது, எம்மிடமுள்ள மட்டுப்படுத்தப்பட்ட பஸ் வண்டிகள் மூலம் எதிர்கால பரம்பரைக்கு இடமளிப்பதற்காக பாடசாலைக்குப் பிள்ளைகளை குறித்த நேரத்திற்குப் பாடசாலைகட்கு ஏற்றிச் செல்லுவதிலும், மீண்டும் வீட்டுக்குக் கொண்டு செல்வதிலும் இதன் மூலம் தேசிய செயலாற்றலிலும் இ.போ.ச ஈடுபட்டுள்ளது.

■ **தேசிய விழாக் காலங்களில் நடைபெறுகின்ற பஸ் சேவைகள்**

சிங்கள, தமிழ் புத்தாண்டு விழா, வெசாக், பொசோன் விழா, கண்டி, கதிர்காம அசல பெரகெர விழா, சிவனொளிபாத மலை சேவை ஆகியன போன்ற சேவைகள் மூலம் இ.போ.ச சமூக விருந்தோம்புநராக செயற்படுகிறது.

■ **பருவகாலச் சீட்டு சேவை**

பாடசாலை, பல்கலைக்கழகங்கள், வயது வந்தோர் ஆகிய பல்வேறு மட்டத்தினரினதும் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இ.போ.ச மேற்கொள்ளும் நடவடிக்கை மூலம் நாட்டிலுள்ள பயணம் செய்யும் பொது மக்கட்கு பொருளாதார ரீதியாக நிவாரணம் கிட்டுகிறது. பழைய பருவகாலச் சீட்டுகட்கு பதிலாக நவீன தொழினுட்ப ரீதியான இலத்திரனியல் பருவகாலச் சீட்டுகளை அறிமுகப்படுத்தல் இ.போ.ச.வால் தொடங்கப்பட்டுள்ளதுடன் தற்போது கொழும்பு, கம்பஹா, கழுத்துறை, கதிர்காமம் ஆகிய பிரதேசங்களில் இது ஏற்கனவே உபயோகத்திலுள்ளது.

■ **அதிவேக நெடுஞ்சாலைகளில் போக்குவரத்துச் சேவை**

இலங்கையின் வீதி முறையில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அதிவேக நெடுஞ்சாலை முறைக்குள் செயலாற்றுவதற்கு விதந்துரைக்கப்பட்ட பஸ்களை ஈடுபடுத்துவதன் மூலம் பயணிப் போக்குவரத்து நடவடிக்கைகளில் இ.போ.ச ஈடுபடக்கூடியதாயிற்று. அதற்கேற்ப தற்போது இலஙகையில் அதிவேக நெடுஞ்சாலை முறையூடாக செயலாற்றும் எமது உல்லாச பஸ்கள் முறை நவீன உலகிற்கேற்றவாறு அமைந்துள்ளன.

■ **சமாந்தரமான போக்குவரத்துச் சேவைகள் செயலிழக்கும் போது இ.போ.ச அளிக்கும் சேவை**

சமாந்திரமான போக்குவரத்துச் சேவைகளில் அடிக்கடி ஏற்படுகின்ற செயலிழப்பினால் நிர்க்கதிக்கு உள்ளாகும் எமது மக்களுக்கு விசேட நிவாரண சேவை வழங்குவது இ.போ.ச வாகும். எம்மிடமுள்ள பஸ் வண்டிகள் மூலம் கிராமங்களிலும் நகரங்களிலும் செயலாற்றும் பல்வேறு சந்தரப்பங்களில் இடருறும் மக்களுக்கு போக்குவரத்து வசதிகள் அளித்து நாட்டிற்கு எம்மால் இயன்றளவு சேவை அளிக்கப்படுகிறது.

## 3.3 2015 ஆம் ஆண்டில் கண்டுள்ள முன்னேற்றம்.

- கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் நாளாந்தம் செயலாற்றலுக்கு விடுவிக்கும் பஸ்கள் தொகையை உயர்த்துவதற்கு இ.போ.ச விற்கு இயலுமாயிருந்ததுடன், அதற்கான முக்கிய காரணம் திறைசேரி உதவியுடன் இ.போ.ச பெற்றுக் கொண்ட 2200 புதிய பஸ்கள் கொள்வனவாகும்.

- அதற்கேற்ப செயலாற்றலுக்கு பெற்றுக் கொடுக்கும் பஸ் தொகை 2015 ஆம் ஆண்டு ஜனவரியில் ஏறத்தாழ 5699ல் இருந்து 2015 ஆம் ஆண்டில் திசெம்பர் இறுதியில் 6120 வரை அதிகரித்திருக்கிறது.

- நாளொன்றுக்கு செயலாற்றக்கூடிய பஸ்கள் தொகையை உயர்த்துவதற்கு இ.போ. சவிற்கு முடிந்துள்ளதுடன். அளிக்கப்படும் பஸ்களுக்கு சமனாக செயலாற்றக்கூடியவாறு பஸ்கள் தொகையை உயர்த்துவதற்கு இயலாமற் போனமைக்கு இ.போ.ச பல செயல்முறை இடர்கட்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தமை காரணமாகும். சாரதிகள், நடாத்துநர்கள் தேவையான அளவிற்கு இல்லாமை போன்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்து 6000 பஸ்களை செயலாற்றும் இலக்கை நோக்கிப் பயணிப்பதற்கு இ.போ.ச முயற்சி செய்து வருகிறது. அதற்கேற்ப 2015 சனவரி அளவில் நாளொன்றுக்கு செயலாற்றப்பட்ட பஸ்தொகை 4917 பஸ்களை 2015 திசெம்பர் இறுதியில் 5444 ஆக அதிகரிக்க முடிந்தது.

- மேற்குறித்த நிலையின் கீழ் மாதாந்தம் செயலாற்றிய கிலோ மீற்றர் தொகையை 33 மில்லியனிலிருந்து 39 மில்லியன் வரை அதிகரிக்கக் கூடியதாயிருந்தது.

- கடந்த ஆண்டில் நாளாந்த வழிப்பட்டியல் சராசரி வருவாய் 60/- மில்லியன் ரூபாவாகவிருந்ததுடன், 2015 ஆம் ஆண்டு சனவரி முதல் டிசெம்பர் வரை நாளொன்றுக்கான சராசரி வருவாய் 70 மில்லியன் ரூபாவரை அதிகரிக்கக்கூடியதாயிருந்தது.

- 2015 ஆம் ஆண்டில் இ.போ.ச 1026 மில்லியன் பயணிகளை ஏற்றியிறக்கியுள்ளது.

- இவ்வாண்டிற்குள் செயலாற்றலை உயர்த்துவதற்கு கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

  - இ.போ.ச வினால் தீர்க்கப்படக்கூடிய பிரச்சினைகளுக்கு கவனம் செலுத்தி இப்பிரச்சினைகளைத் தீர்த்து எதிர்கால திட்டங்களை தயாரிப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் தலைமையில் நிறுவக பிரதானிகளுடனான கலந்துரையாடல் நடைபெற்றுள்ளதுடன், அவ்வாறு மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

  - 2200 பஸ்களில் மும்மொழி சேரிடம் காட்டும் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளதுடன், நாடு பூராவும் சகல பிரதேசங்களிற்கும் பொருந்தக்கூடிய சேரிடங்காட்டும் பலகைகளை அறிமுகப்படுத்துவதற்கு இத்திட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

- இரவு இறுதிப் பயணத்தைத் தொடர்ச்சியாக செயலாற்றும் திட்டத்தின் கீழ் புறக்கோட்டை மத்திய பஸ் நிறுத்துமிடத்தில் இரவு 10.00 மணி முதல் சேவைகளை ஆரம்பித்து 30 சேரிடங்கட்கு பயணங்கள் செயலாற்றப்படுகின்றன.

- இ.போ.ச வும் புகையிரதத் திணைக்களமும் சேர்ந்து நடாத்தும் இயைபுபடுத்திய சேவையை மேலும் மேம்படுத்துவதற்காக தெமட்டக் கொடை, களுத்துறை, மொறட்டுவை, தெஹிவலை, கொள்ளுப்பிட்டி ஆகிய புகையிரத நிலையங்களிலிருந்து, புகையிரதங்களில் வந்து சேரும் பயணிகளின் போக்குவரத்துத் தேவைகட்கு வேண்டிய வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

- GPRS வசதியைப் பயன்படுத்தி பஸ்களை கண்காணிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட 2200 பஸ்களிலும் இவ் வசதி இணைக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப பஸ் நிற்கும் நிலையிடம், எரிபொருள் நுகர்வு ஆகிய தகவல்கள், பஸ்கட்குள் இருக்கும் பயணிகள் பற்றிய தகவல்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ள முடியும்.

- பாடசாலைப் பிள்ளைகளின் பருவக் காலச் சீட்டிற்குப் பதிலாக இலத்திரனியல் பருவகாலச் சீட்டுகள் அறிமுகப்படுத்தல் கடந்த ஆண்டில் தொடக்கப்பட்டுள்ளதுடன் தற்போதும் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

- அனுராதபுர புனித நகரை மையமாக கொண்டு இ.போ.சவினால் விசேட பஸ் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் காலை 6.00 மணி முதல் பி.ப 7.00 மணி வரை 45 நிமிடங்கட்கொரு தடவை இச் சேவை நடைபெறுகிறது. 02 சாதாரண பஸ்களும், 02 உல்லாச பஸ்களும் இச் சேவைக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

- 2014 ஆம் ஆண்டில் இ.போ.சவிடம் 2800 இலத்திரனியல் சீட்டு இயந்திரங்கள் இருந்தன. இத்தொகையை 3700 சீட்டு இயந்திரங்களாக உயர்த்துவதற்குத் தேவையான மீதி 900 இலத்திரனியல் சீட்டு இயந்திரங்கள் 2015 ஆம் ஆண்டின் முதல் 06 மாத காலத்திற்குள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

- இ.போ.ச வினால் அதி உல்லாச பஸ்கள் கொள்வனவு செய்யப்பட்டு தெற்கு, கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலைகளில் உபயோகிக்கப்படுவதுடன், நகரங்கிடையேயான சேவைகளிலும் அவற்றை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது அதிவேக நெடுஞ்சாலைகளிலும் அதே போன்று வெளி நெடுஞ்சாலைகளிலும் அதி உல்லாச பஸ் சேவைகளை வழங்குவதற்கு இ.போ.சவிற்கு இயலுமாயிற்று. இப் பஸ்களுக்கு மக்களிடமிருந்து அமோக ஆதரவு கிடைத்து வருகிறது.

- சிசுசறிய பாடசாலை பஸ் சேவைகளின் கீழ் 2014 ஆம் ஆண்டு முடிவில் 619 பஸ்கள் செயலாற்றப்பட்டன. 2015 ஆம் ஆண்டில் இதனை 740 பஸ்களாக அதிகரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 3.4 இ.போ.ச பஸ் அணி அபிவிருத்தி நடவடிக்கை

- கடந்த 02 ஆண்டுகட்குள் புதிய பஸ்கள் கொள்வனவு செய்யும் திட்டத்தின் கீழ் 42 ஆசன, 54 ஆசனங்களுடைய 2200 புதிய பஸ்கள் கொள்வனவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 42 ஆசனங்களுடைய 800 பஸ்களும், 54 ஆசனங்களுடைய 1400 பஸ்களும் கொள்வனவு செய்வதே எதிர்பார்க்கப்பட்ட இலக்காகும். இதில் 2014 ஆம் ஆண்டு முடிவில் 1319 பஸ்களும், 2015 ஆம் ஆண்டின் முதல் 06 மாதங்கட்குள் 881 பஸ்களும் கிடைத்தன. அதற்கேற்ப தற்போது செயலாற்றலுக்கு அளிக்கப்படும் பஸ்கள் தொகை 6000 மட்டத்திற்கு உயர்ந்துள்ளது.

- பொதுநலவாய நாடுகள் மாநாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட 68 பஸ்கள் இ.போ.ச விற்கு அளிக்கப்பட்டன. அதற்காக 2015 ஆம் ஆண்டில் 238.05 மில்லியன் ரூபா செலுத்த வேண்டும். ஆயினும் முதல் 6 மாத காலத்திற்குள் 218.24 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டதுடன் இவ் வேற்பாடு திறைசேரி மூலம் இ.போ.ச விற்கு அளிக்கப்பட்டது.

- தொலைக் கிராமங்களில் உள்ள பயணத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 42 ஆசன, 54 ஆசனங்களுடைய பஸ்கள் செயலாற்றல் வசதியற்றதால் இதற்கென இ.போ.ச சிறிய பஸ்களை நாடவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்கான தீர்வாக 35 ஆசனங்களுடைய 80 சிறிய பஸ்களை 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- **இ.போ.ச பஸ் அணி வயது வாரியாக கீழே காட்டப்பட்டுள்ளது.**

| தற்போதைய பஸ் அணிநிலை (2015.12.31) | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| விடயம் | 2 ஆண்டு கட்குக் குறைந்த | 02 ஆண்டுக்கும் 05 ஆண்டுக்கும் இடைப்பட்ட | 05 ஆண்டுக்கும் 10 ஆண்டுக்கும் இடைப்பட்ட | 10 ஆண்டுக்கும் 15 ஆண்டுக்கும் இடைப்பட்ட | 15 ஆண்டு கட்கு மேற்பட்ட | மொத்த பஸ் அணி |
| செயலாற்றப் | | | | | | |
| படுபவை | 2508 | 622 | 1701 | 449 | 1058 | 6338 |
| செயலாற்றப் படாமல் உள்ளவை | | | 421 | 244 | 776 | 1441 |
| **மொத்த பஸ் அணி** | **2508** | **622** | **2122** | **693** | **1834** | **7779** |

இந்த பஸ்கட்கான பேணல், புனருத்தாரணத்திற்கான, எஞ்சின், கியர் பெட்டிகள், பஸ் உடற்கோப்புகள் ஆகியனவை பழுதுபார்க்கப்பட வேண்டியுள்ளதுடன் நாளாந்தம் சிறு பழுதுபார்த்தல்களையும் கவனிக்க வேண்டும். 2015 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட பழுதுபார்த்தல்கள் தொகை கீழே தரப்பட்டுள்ளது.

| பஸ் புனருத்தாரணமும் பழுதுபார்த்தலும் | | | |
|---|---|---|---|
| ஆண்டு | எஞ்சின்கள் | கியர்ப்பெட்டிகள் | பஸ் உடற்கோப்புகள் |
| 2014 | 653 | 413 | 230 |
| 2015 | 500 | 173 | 265 |

## 3.5 இதர அபிவிருத்தி நடவடிக்கைகள்

- 2015.06.30 அன்றுள்ளவாறு இடையறாத செயலாற்றலுக்காக 685 சாரதிகளும், 636 நடாத்துநர்களும் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. புதிய சாரதிகள், நடாத்துநர்கட்காக கழுத்துறை, பொத்துகரை, மொறட்டுவை ஆகிய சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள் மூலம் நிறுவகத் தேவைகட் கேற்ற விதத்தில் பயிற்சியளிக்கப்பட்டது.

- வினைத்திறனுடைய சேவையைப் பெறும் நோக்கில் தற்போது சேவையிலுள்ள அலுவலர்கட்கு அவர்களின் செயற்திறன் வளர்ச்சிக்காக இவ்வாண்டில் கீழ்வரும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் அவர்கள் பங்கேற்க செய்யப்பட்டனர்.

| தொடர் இல | நிகழ்ச்சித் திட்டம் | பயிற்சியர் | பயிற்சியர் தொகை |
|---|---|---|---|
| 01 | இ.போ.ச நிறுவக வள முகாமைத்துவ தகவல் முறை (ERP) நுவெநசிசளைநள Resources Planning) | பிராந்திய முகாமையாளர்கள்/ செயலாற்றல்/ நிதி/ பொறியியல்/ உதவி முகாமையாளர்கள் செயலாற்றல்/நிதி /பொறியியல் | 600 |
| 02 | சாலை களஞ்சியக் காப்பாளர்கட்கு பயிற்சி | களஞ்சியக் காப்பாளர்கள் | 80 |
| 03 | இ.போ. சாலை முகாமையாளர்களுக்கு பயிற்சியளித்தல். முகாமைத்துவம்/ ஆளுமை தொடர்பு தேர்ச்சி அபிவிருத்தி | சகல சாலை முகாமையாளர் கட்கும் | 105 |
| 04 | இ.போ.ச திடீர் பரிசோதனைக் குழு பரிசோதனையாளர்கட்கு பயிற்சி. திடீர் பரிசோதனைக்குழு பயிற்சியர்கட்கு வேலைக்களம் | திடீப் பரிசோதனை குழு பயிற்சியர்கட்கு | 70 |
| 05 | உபாயமார்க்க திட்டத் தயாரிப்பு தொடர்பாக ளுடுஜனுயு மூலம் பயிற்சி | சிரேட்ட முகாமைத்துவம் | 33 |
| 06 | பொறிவலர்கட்கு அசோக் லேலன்ட் கம்பனி மூலம் பயிற்சி | 200 பொறிவலர்கள், 150 சாரதிகள், 110 உதவி முகாமையாளர்கள் (பொறியியல்) | 460 |

- SAGE, ACCPACK 300 மென்பொருள் கணக்கீட்டு மென்பொருளாக உபயோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி கம்பஹா பிரதேசத்தில் இதன் பாவனை தொடர்பான பயிற்சி முடிவடைந்துள்ளதுடன் கொழும்புப் பிரதேசத்தில் இப்பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது.

## 3.6 இ.போ.ச விற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி

சாலை, தலைமை அலுவலகம், சுற்றுலா வங்களாக்கள், ஓய்வு அறைகள் ஆகியவற்றின் பேணல் நடவடிக்கைகள் மேற்கொள்ளல். அதற்கேற்ப 2015 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பணிகள் செய்து முடிக்கப்பட்டன.

- அனுராதபுர சுற்றுலா வங்களாவிலுள்ள பூங்காவை அலங்கரித்தல்.
- கதிர்காம ஓய்வறையை நவீனமயப்படுத்தல்.
- இரத்மலானை சாலையில் பழுதடைந்த முகட்டை திருத்தல்.
- அங்கொடை சாலை முகட்டைத் திருத்தல்.
- அம்பாறை சாலையின் புதிய கட்டடப் பணி முடித்தல்.
- இ.போ.ச தலைமை அலுவலகத்தின் கழிவு வடிகால் முறையை நவீன மயமாக்கல், தொலைபேசி அறைக்கு பழுதுபார்த்தல், நிலத்துக்கடியிலுள்ள நீர்த் தாங்கி பழுதுபார்த்தல், நிதிப் பகுதியின் “சீலிங்” பழுதுபார்த்தல், புதிய செயலாற்றல் அறை நிருமாணித்தல்.
- மத்திய பஸ் அலுவலகத்தின் பழுதுபார்த்தற் சேவை கிடங்குகளை நிர்மாணித்தல்.
- உடனல மேம்பாட்டிற்காக தலங்கம சாலையிலும், கண்டி பிரதேச அலுவலகத்திலுமுள்ள சுகாதார வசதிகளை அதிகரித்தல்.
- பழுதடைந்த கட்ட்டங்களை நவீனமயப்படுத்தலின் கீழ் கெஸ்பாவை, மொறட்டுவை, மகரகமை, இரத்மலானை, களனி, கலவான சாலையிலும், வயம்ப பிராந்திய அலுவலகத்திலும் உடகமுல்லை சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளிலுமுள்ள கட்டங்கள் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன.

## 3.7 பிரச்சினை எழக்கூடிய வேறு விடயங்கள்

இலங்கை போக்குவரத்துச் சபை நாளொன்றுக்கு ஏறத்தாழ 5270 பஸ்களை செயலாற்றி பெருந்திரளான மக்கட்கட்கு போக்குவரத்து வசதிகளை அளித்து நாட்டின் உற்பத்தி நடவடிக்கைகட்கும் பாரிய பங்களிப்பினை நல்குகிறது.

பாடசாலை பல்கலைக் கழகங்கள், தொழினுட்ப கல்லூரிகள் ஆகியவற்றின் மாணவர்கட்கு போக்குவரத்து வசதிகள் அளிப்பதற்கு ஒழுங்கு செய்திருப்பதுடன் தினமும் வேலைக்குச் செல்பவர்கட்கும், முப்படையினர்க்கும், பொலிசாருக்கம் 35% விலைக்கழிவுடன் பருவச்சீட்டுகள் வழங்கி அவர்கள் பயணச் செலவைக் குறைப்பதற்கும் இ.போ.ச உதவுகிறது. இதில் இ.போ.ச விற்கு ஏற்படும் பிரச்சினைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- **பருவச் சீட்டிற்கு 35மூ கழிவு வழங்குவதால் இல்லாமல் போகும் வருவாய்**

பருவச் சீட்டிற்கு 35% கழிவு வழங்குவதால் இல்லாமல் போகும் வருவாய் பாடசாலைச் சிறார்கட்கு உரிய கட்டணத்தின் 55% மும் பல்கலைக்கழக, தொழினுட்ப கல்லூரி மாணவர்கட்கு உரிய கட்டணத்தின் 35% மும் திறைசேரியினால் மீள நிரப்பப்படுகிறது. ஆயினும், 35% கழிவுடன் மேற்குறித்த சகல பயணிகட்கும். பருவச்சீட்டுகள் வழங்கப்படுவதால் பாரிய நட்டம் ஏற்படுகிறது.

- **சிக்கனமற்ற வழிகளில் செயலாற்றுவதால் ஏற்படும் நட்டம்.**

வருவாய் மிகக் குறைந்த கிராமிய வழிகளில் பல பஸ்கள் நாளாந்தம் செயலாற்றப்படுவதால், கிராமங்களையம் நகர்களையும் இணைப்பதன் மூலம் இ.போ.ச நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்கினை நல்குகிறது. இதனால் இ.பே.ச விற்கு ஆண்டொன்றுக்கு 6000 மில்லியன் ரூபா அளவில் நட்டம் ஏற்படுகிறது. இவ்வாறு சிக்கனமற்ற வழிகளில் செயலாற்றுவதற்காக பஸ்களின் செயலாற்றல் செலவாக 2015 ஆம் ஆண்டு திறைசேரியால் மீள நிரப்பப்பட்ட தொகை ஏறத்தாழ 4975 மில்லியன் ரூபாவாகும்.

- **வருவாயில் பெரும் பகுதி எரிபொருளுக்கு**

செயலாற்றல் வருவாயில் எரிபொருளுக்கு மிகப் பெரிய நூற்று வீதத்தை செலவிட வேண்டியுள்ளது. 2015 ஆம் ஆண்டில் எரிபொருளுக்காக வழிப்பட்டியல் வருவாயின் 51% செலவாகிற்று.

- **ஆயுட்காலம் கடந்த பஸ்கள்**

இ.போ.ச தற்போது செயலாற்றலுக்கு அளிக்கின்ற ஏறத்தாழ 6000 பஸ்களில் பழுதுபார்த்தல்கள், தடாக சேவை, திடீர் சேவைகள், பழுதடைவுகள் ஆகியவற்றிற்காக பஸ்கள் அகற்றப்படுகின்றன. இதனால் தினமும் ஏறத்தாழ 5270 பஸ்கள் மட்டுமே செயலாற்றக்கூடியதாயுள்ளது. 10 ஆண்டு ஆயுட்காலம் கடந்த பஸ்கள் அணியில் அரைவாசிக்கு மேற்பட்ட தொகையாகவிருப்பதால் பேணற் செலவு அதிகரித்துள்ளது.

➢ **இதர பிரச்சினைகள்**

1. தனியார் துறையுடனான போட்டி காரணமாக பஸ் செயலாற்றலில் வெவ்வேறு அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன.

2. பஸ்களை நிறுத்துவதற்கு சேரிடங்களில் வசதியின்மை.

3. நிதி ஏற்பாடின்மையால் கட்டட வேலைகள் தாமதமாகின்றன.

4. சிவில் வேலைக்கள நிருமாணப் பணிகட்கு வேண்டிய உபகரணங்கள் குறைவு.

5. மக்கள் தேவையினைப் பொருட்படுத்தாது நேர அட்டவணைகள் தயாரிக்கப்படுவதால் வழிகளில் பயனுள்ள சேவைகளை நடாத்த முடியாது பிரச்சினையாகவுள்ளது.

6. இ.போ.ச ஊழியர்கள் சம்பள அளவுத் திட்டங்கள் இதர அரச நிறுவகங்களுடன் ஒப்பிடும் போது மிகக் குறைவாக இருப்பதால் தகைமைகளுடைய அலுவலர்களை நிறைவேற்று தரத்திற்கு ஆட்சேர்ப்பது மிகவும் கஷ்டமாக உள்ளது.

7. சென்ற காலங்களில் இ.போ.ச பல்வேறு நிதி நெருக்கடிகளை எதிர்கொண்டமையால் ஊழியர்களின் பணிக்கொடையை உரிய முறையில் வழங்க முடியாது போயிற்று. 2015.12.31 ஆந் திகதியன்றுள்ளவாறு ஊழியர்கட்கு நிலுவையிலுள்ள நிதி விவரம் வருமாறு.

| **விடயம்** | **ரூபா.மில்லியன்** |
|---|---|
| ஊழியர் சேமலாப நிதிக்கு | 9,609 |
| ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு | 43 |
| பணிக்கொடைக்கு | 2,321 |
| **மொத்தம்** | **11,973** |

# 4. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

## 4.1 அறிமுகம்

1991இன் இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் மூலம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நிறுவப்பட்டது. இச்சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு கடந்த காலத்தினுள் அடைந்து கொண்ட முன்னேற்றம் மிகவும் முக்கியமானதாகும்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தி போன்றே சமூக அபிவிருத்தி குறித்த நோக்கினையும் நிவர்த்தி செய்து கொள்வதற்காக போக்குவரத்து தொடர்பில் சாட்டப்பட்டுள்ள பொறுப்புக்கள் மிகப் பெரிது. அதன் படி பயணிகள் போக்குவரத்திற்குத் தேவையான நியதிச்சட்டக் காரியங்களை தொகுத்து நாட்டின் போக்குவரத்துத் தேவைகளை ஒழுங்குபடுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் முக்கிய பொறுப்பாகும்.

### தொலைநோக்கு

“நாட்டினுள் சமூக-பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்காக தரமிக்க, ஆகுசெலவு விளைபயன்மிக்க மற்றும் பாதுகாப்புமிக்க ஒன்றிணைக்கப்பட்ட போக்குவரத்துக் கட்டமைப்பு மற்றும் சேவை ஆகியவற்றின் மூலம் இலங்கையின் எல்லா குடிமக்களினதும் பல்வேறுபட்ட போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்திசெய்தலை உறுதிப்படுத்துதல்.”

### பணி

“எல்லா போக்குவரத்து ஊடகங்கள் குறித்தும் அவதானத்துடன், பயணியின் திருப்தி மற்றும் சிறந்த சந்தை நடவடிக்கையினை உறுதிப்படுத்துவதுடன் வினைதிறன்மிக்கதும் விளைபயன்மிக்கதுமான பேருந்துப் பயணிகள் போக்குவரத்து கட்டமைப்பினை நிறுவும் பொருட்டு ஒழுங்குபடுத்தற் திட்டத்தினை உருவாக்கிச் செயற்படுத்துதல்.”

## 4.2 துருமீக்கு புயுனீகுளு பேர்க்குவுருதுதுச் சேஜவுக்குர்கு சேயுறுபுடுதுதுப்புடும் சேயுறுறீடுடுஞ்குளு

- **புர்டுசுர்ஜலு பேருநுதுச் சேஜவு சேயுறுறீடுடும் ‘சீசு சேருீயு’**

அரச அனுசரணையுடன் நாட்டின் எல்லா நகரங்களையும் மையமாகக் கொண்டுள்ள பாதைகளையும் பாடசாலைகளையும் உள்ளடக்கும் வண்ணம் சலுகைக் கட்டண முறைமையொன்றின் கீழ் முறையாக, நம்பிக்கைமிகுந்த பாதுகாப்பான பாடசாலை சிறார்களுக்காவே ஒதுக்கப்பட்ட நிரந்தர பேருந்துச் சேவையொன்றினை இபோச மற்றும் தனியார் பேருந்துகளை ஈடுபடுத்தி சிசு செரிய என்ற பெயரில் நாடு முழுதும் செயற்படுத்தப்படுகின்றது.

**2015.12.31 ஆகையில் செயற்படுத்தப்படும் சிசு செரிய சேவைகள்**

| தொ.இல. | மாகாணம் | சிசு செரிய பேருந்துகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மேல் | 410 |
| 2 | வடமேல் | 231 |
| 3 | வடமத்திய | 131 |
| 4 | தென் | 111 |
| 5 | சப்பிரகமுவா | 122 |
| 6 | ஊவா | 67 |
| 7 | கிழக்கு | 108 |
| 8 | மத்திய | 42 |
| 9 | வட | 23 |
| 10 | மாகாணங்களுக்கு இடையில் | 10 |
| | **மொத்தம்** | **1,255** |

இச்செயற்றிட்டத்தின் கீழ் பாடசாலை சிறார்கள் உள மற்றும் உடல் ரீதியாக அசௌகரியங்கள் இன்றி நேரகாலத்துடன் பாடசாலைக்குச் செல்லும் மற்றும் பாதுகாப்பாக வீடுகளுக்கு திரும்ப வரும் வசதிகளைச் செய்துகொடுத்தல் இச்செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். மேலும், அரைக்கட்டண முறை மூலம் பெற்றோருக்கு பொருளாதார ரீதியாக சலுகை வழங்குதல், நம்பிக்கை மற்றும் முறையான தன்மை மூலம் சிறுவர் அசைளகரியத்திற்கு உள்ளாவதைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் இச்செயற்றிட்டத்தின் ஏனைய குறிக்கோள்களாகும். இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் மூலம் இச்செயற்றிட்டத்திற்கு பேருந்துச் சேவைகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. இச்சேவையின் போது பாடசாலை சிறார்களின் சாதாரண கட்டணத்தில் 50% அளவே அறவிடப்படுவதுடன், ஓட்டுனரின் வருவாயில் ஏற்படக்கூடிய குறைப்பாட்டிற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் முன்கூட்டி இணங்கப்பட்ட கட்டண அளவின் படி பிறகு மீள்செலுததும் விதத்தில் சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எவ்வாறெனினும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் தமது நடமாடும் பரிசோதகர்களை ஈடுபடுத்தி நடமாடும் பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலம் முடியுமான உச்சளவில் ‘சிசு செரிய’ சேவையின் தரத்தினைப் பாதுகாப்பதற்கு கடப்பாடு கொண்டுள்ளது.

இதற்காக 2015.12.31ஆந் திகிதியாகையில் 418 மி. ரூபா செலவிடப்பட்டுள்ளது.

- **கிராமப்புற பஸ் சேவைச் செயற்றிட்டம் 'கெமி செரிய'**

நகரத்தில் இருந்து தூரத்தில் அமைந்துள்ள பிரதேசங்கள் வெறிச்சோடுவதைத் தவிர்ப்பதற்கு 'கெமி செரிய' செயற்றிட்டம், கிராமத்திலிருந்து நகரத்திற்கும் நகரத்திலிருந்து கிராமத்திற்கும் பயணிகள் போக்குவரத்துச் சேவையினை வழங்கி கிராமத்தினையும் நகரத்தினையும் ஒன்றிணைக்கும் ஊடகமாகச் செயற்படுகின்றது. 'கெமி செரிய' கிராமப்புற பேருந்துச் சேவை செயற்றிட்டத்தின் நோக்கமானது, கிராமத்து மக்களுக்கு அவர்களது நாளாந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அவசியமான போக்குவரத்து வசதிகளை தொடர்ச்சியாக நம்பகமாக மற்றும் இலாபகரமானதாக வழங்குவதாகும்.

**2015.12.31 ஆகையில் செயற்படுத்தப்படும் கெமி செரிய சேவைகளின் எண்ணிக்கை**

| **தொ. இல.** | **மாகாணம்** | **கெமி செரிய பேருந்துகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | மேல் | 1 |
| 2 | தென் | 4 |
| 3 | வட மத்திய | 1 |
| 4 | கிழக்கு | 6 |
| 5 | வடமேல் | 9 |
| | **மொத்தம்** | **21** |

2015.12.31 ஆகையில் 21 கெமி செரிய சேவைகள் செயற்படுத்தப்பட்டதுடன், அதற்காக 6.74 மி. ரூபா செலவிடப்பட்டுள்ளது.

- **இரவு நேரப் பேருந்துச் சேவை செயற்றிட்டம் 'நிசி செரிய'**

இச்செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கானது இரவின் கடைசி பயணமுறை மற்றும் அதிகாலையில் முதல் பயணமுறைக்காகப் பொதுப் பேருந்துச் சேவையினை ஈடுபடுத்தி பயணிகள் மிகவும் நம்பகமாக மற்றும் பாதுகாப்பாகத் தமது பயணத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான வசதிகளை வழங்குவதாகும். இது வரையில் செயற்படும் நிசி செரிய சேவைகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு.

**2015.12.31 ஆகையில் செயற்படுத்தப்படும் நிசி செரிய சேவைகளின் எண்ணிக்கை**

| தொ.இல. | மாகாணம் | நிசி செரிய பேருந்துகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மேல் | 52 |
| 2 | வடமேல் | 12 |
| 3 | வட மத்திய | 11 |
| 4 | தென் | 26 |
| 5 | சப்பிரகமுவா | 3 |
| 6 | ஊவா | 7 |
| 7 | கிழக்கு | 3 |
| 8 | மத்திய | 20 |
| | **மொத்தம்** | **134** |

2015.12.31 ஆகையில் 134 நிசி செரிய சேவைகள் செயற்படுத்தப்பட்டதுடன், அதற்காக 8.48 மி. ரூபா செலவிடப்பட்டுள்ளது.

■ **பாடசாலைச் சிறார்களுக்கு இலவசமாக மிதிவண்டிகளை விநியோகித்தல்**

சிசுசெரிய செயற்றிட்டத்தின் கீழ் பேருந்துச் சேவையினை வழங்குவதற்கான அடிப்படை வசதிகள் இல்லாத கஷ்டப் பிரதேசங்களில் வாழும் பாடசாலைச் சிறார்களின் பயண வசதிக்காக சூழல் நேயமிக்க மற்றும் கிராமிய பொருளாதாரத்திற்கு இசையக்கூடிய போக்குவரத்து ஊடகமாக மிதிவண்டியினை வரவேற்கத்தக்கதாக ஆக்கும் நோக்கில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இப்பாரிய சமூகப் பணியினை ஆரம்பித்து செயற்படுத்துகின்றது.

செயற்றிட்டத்தின் மூலம் இது வரையில் நாடு முழுதும் கஷ்டப் பிரதேசங்களில் வாழும் 3364 பாடசாலைச் சிறார்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

2015.12.31 ஆகையில் இதற்கான திரண்ட செலவு 5.32 மி.ரூபாவாகும்.

■ **நேர அட்டவணைகளைத் தயாரித்தல் மற்றும் திருத்தி அமைத்தல்**

எல்லா பேருந்து ஓட்டுனர்களுக்கும் சம சந்தர்ப்பத்தினை வழங்கும் விதத்தில் பயண நேர அட்டவணைகளைத் தயாரித்து, ஓட்டுனர்களின் வியாபார நிலைப்பாட்டினைப் பாதுகாப்பதும் அதன் மூலம் பயணிக்கும் மக்களுக்கு நம்பகமானதும் பாதுகாப்பானதுமான உயர் தரமிக்க பொதுப் பேருந்துச் சேவையினை வழங்குவதும் இச்செயற்றிட்டத்தின் முக்கியமான நோக்கங்களாகும். இதற்கு மேலதிகமாக பேருந்து ஒன்று சாதாரணமாக ஒரு நாளைக்கு ஓடும் கிலோ மீற்றர் அளவினை உச்சப்படுத்துவதும் இச்செயற்றிட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களில் முக்கியமானதொன்றாகும்.

2015.12.31 ஆந் திகதி வரையில் 0.08 மி.ரூ. செலவு இதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

■ **பேருந்துக் கட்டண ஒழுங்கீனங்களை நீக்குதல்**

2002ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட பேருந்துக் கட்டணக் கொள்கையின் பரிந்துரைப்பின் படி, பேருந்துக் கட்டண ஒழுங்கீனங்களை நீக்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

பேருந்துப் பயணி பயணிக்கும் தூரத்திற்கு ஏற்ப கட்டணமொன்றை அறவிடும் மற்றும் கட்டண சந்தர்ப்பங்களை உறுதியான நியமத்தின் கீழ் நிறுவும் நோக்கில் பேருந்துக் கட்டணக் கொள்கையின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் படி கட்டண சந்தர்ப்பமொன்றிற்கான சாதாரண தூர அளவு பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், சமதரைப் பாதையின் கட்டண சந்தர்ப்பத்திற்கு பரிந்தரைத்துள்ள தூரம் 2 கிமீ. என்பதுடன், மலைப்பாங்கான பாதையில் அத்தூரம் 1.7 கிமீ. ஆகும்.

அப்பரிந்துரைகளின் பிரகாரம், 2015ஆம் ஆண்டு இறுதியாகையில் மாகாணங்களுக்கு இடையில், மேல், தென், மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களுக்கு உரிய பாதைகளில் காணப்பட்ட ஒழுங்கீனங்களை நீக்கி நியமமிக்க கட்டண அட்டவணைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன. ஊவா, சபரகமுவா, வட மாகாணங்களுக்கு உரிய பாதைகளில் காணப்பட்ட ஒழுங்கீனங்களை நீக்கி நியமமிக்க கட்டண அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இதற்காக 0.023 மி.ரூபா செலவு 2015.12.31ஆந் திகதியாகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

■ **பேருந்து ஊழியர்களைப் பதிவு செய்தல் மற்றும் பயிற்றுவித்தல்**

மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துகளில் பணியில் ஈடுபட்டிருக்கும் சாரதிகளினதும் நடத்துனர்களினதும் பணியினை தொழில்வாண்மை மிக்கதாக ஆக்குதல் மற்றும் ஒழுக்க மட்டத்தினை மேம்படுத்துதல் பொருட்டு விசேட பயிற்சி நிகழ்ச்சிகள் இதன் கீழ் செயற்படுகின்றன. இப்பயிற்சி நிகழ்ச்சிகள் நாட்டில் உள்ள போதனாசிரியர்களால் மேற்கொள்ளப்படவதுடன், பாடநெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்பவர்களுக்கு விசேட சாரதி/ நடத்துனர் அடையாள அட்டை ஒன்றை வழங்குவதும் இச்செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

2015ஆம் ஆண்டினுள், திசெம்பர் மாதம் முடிவடையும் போது 804 சாரதிகளும் 808 நடத்துனர்களுமாக 1612 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், 2015.12.31ஆந் திகதியில் திரண்ட செலவு 2.13 மி.ரூபாவாகும்.

■ **பேருந்துத் தரிப்பிடங்களை அமைத்தல் மற்றும் நவீனமயப்படுத்துதல்**

பொதுப் பயணிகள் போக்குவரத்துக்குரிய அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்யும் ஒரு படியாக முழுமையான பேருந்துத் தரிப்பிடமொன்றை மக்களுக்கு வழங்குவதை நோக்காகக் கொண்டு பேருந்துத் தரிப்பிட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இச்யெற்றிட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுத்துள்ளது.

30 வருட காலமாக நிலவிய கொடூர யுத்தம் காரணமாக வட மாகாணத்திலிருந்து நழுவிச் சென்ற அபிவிருத்திப் பாதைகளை மீண்டும் ஆரம்பித்து போக்குவரத்துத் துறைக்கு புத்துயிர வழங்குவதற்கு ஏற்கெனவே வவுனியா நகரத்தில் நவீன வசதிகள் கொண்ட புதிய பேருந்துத் தரிப்பிடத்தை அமைக்கும் முதல் கட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையின் தரத்தினை விருத்தி செய்வதற்கு தலவாக்கலை நகரத்திலும் புதிய பேருந்துத் தரிப்பிடமொன்று அமைக்கப்பட்டு 2015 ஒக்டோபர் 31ஆந் திகதியன்று போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் கௌரவ நிமல் சிறிபால டி சில்வா அவர்களின் கரங்களால் பொதுமக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது.

மேலும், வத்துமுல்ல பேருந்துத் தரிப்பிடம் பயணிகளின் தேவைகளுக்கேற்ப வசதிகள் வழங்கப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டு மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

மேலும், கிண்ணியா மற்றும் மெதகம ஆகிய பிரதேசங்களில் புதிய பேருந்துத் தரிப்பிடங்கள் இரண்டினை அமைக்கும் பணிகள் இவ்வாண்டினுள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன் மூலம், பேருந்துத் தொழிற்றுறையில் ஈடுபடுவோர் மற்றும் பொதுப் போக்குவரத்துச் சேவை குறித்து பொதுமக்களின் பாராட்டு மற்றும் நம்பிக்கையை ஏற்படுத்துவதும் கேள்வியினை அதிகரிப்பதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

2015.12.31 ஆந் திகதியாகையில் இதற்கான திரண்ட செலவு 88.59 மி.ரூபாவாகும்.

## ■ ஆய்வுகள்

போக்குவரத்துத் துறையில் தினமும் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பில் கூடிய கவனத்துடன் நடவடிக்கை மேற்கொண்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கொள்கைகளைத் தயாரிக்கும் போது, திட்டங்களைத் தீட்டும் போது மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்ப எடுக்க வேண்டிய தீர்மானங்களின் போது தேவையான தரவுகளை வழங்குதல் ஆய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் படி பொதுப் போக்குவரத்துச் சேவையினைப் பயன்படுத்துவோர் மற்றும் பேருந்து ஓட்டுனர்கள் ஆகிய இரு தரப்பினர்களுக்கும் நியாயமான முறையில் கேள்வி மற்றும் நிரம்பலை மிகச் சிறப்பாகக் கையாள்வதற்கு தேவையான தரவுகளைத் தொகுத்தல் ஆய்வுப் பிரிவின் முக்கியமான பணியாகும். பிரதானமாக மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து இயக்கத்திற்குரிய பயணிகள் கேள்வி ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதுடன், அதன் மூலம் வழங்கப்படும் சரியான தரவு அட்டவணைகளைத் தயாரிக்கும் போது மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்கும் போது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

2015 திசெம்பர் மாதம் இறுதியாகையில் 23 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 2015.12.31 ஆந் திகதியாகையில் 2.94 மி.ரூ. திரண்ட செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- **ஜீ.பீ.எஸ். (GPS) தொழில்நுட்பம்**

பொதுப் போக்குவரத்துத் துறையில் விளைபயன் மற்றும் நம்பகத்தன்மையினை உறுதி செய்யும் பொருட்டு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துதல் இச்செயற்பாட்டுத் தொடரின் முக்கிய குறிக்கோளாகும். அதாவது இவ்விசேட உபகரணத் தொகுதியைப் பேருந்தினுள் பொருத்தி அலுவலகத்தில் இருந்தவாறே அப்பேருந்தினை மேற்பார்வைசெய்யும் ஆற்றல் இதன் மூலம் ஏற்பட்டுள்ளது. பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையின் தரத்தினை விருத்தி செய்வதற்கும் வினைத்திறன்மிக்க போக்குவரத்துச் சேவையொன்றினை வழங்குவதற்கும் இம்முயற்சி பெரிதும் உறுதுணையாகின்றது.

இதற்காக 2015.12.31ஆந் திகதியாகையில் 8.88 மி.ரூபா திரண்ட செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- **தேசிய போக்குவரத்துத் தரவுகளைச் சேகரித்தல்**

போக்குவரத்து தொடர்பான கொள்கைகளைத் தயாரிப்பதில் ஈடுபடும் மற்றும் போக்குவரத்து குறித்து திட்டங்களைத் தீட்டும் நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுக்கு போக்குவரத்து தொடர்பில் பிரச்சினைகளை இனங்காண்பதற்கும் அப்பிரச்சினைகளுக்கு பொருத்தமான தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் தேவையான புள்ளிவிபரத் தரவுகளைச் சேகரித்தல், களஞ்சியப்படுத்துதல், பகுப்பாய்தல் என்பன இத்தரவுகள் சேகரிப்பதன் முக்கிய நோக்காகும். 2010 மார்ச் மாதம் இப்பணி முதலில் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் கீழ் போக்குவரத்து அமைச்சு மற்றும் போக்குவரத்துடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் இருந்து தேசிய போக்குவரத்து தரவுகளைச் சேகரித்து அத்தரவுகளைப் பகுப்பாய்வு செய்து குறிப்பிட்ட தகவல்கள் மற்றும் புள்ளிவிபரங்கள் வருடாந்த அறிக்கையாக வெளிவிடப்படுகின்றன.

2015.12.31ஆந் திகதியாகையில் 0.14 மி.ரூ. திரண்ட செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4.3. செயற்றிட்டங்கள் அல்லாத சேவைகள்

- **பொதுமக்கள் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவு**

மாகாணங்களுக்கு இடையிலான தூரப்பயண சேவைகள் தனியார் சேவையினைப் பயன்படுத்தும் போது பேருந்துப் பணியாளர்கள் அல்லது வேறு ஏதேனும் முறையில் மக்கள் முகங்கொடுக்க வேண்டிய அசௌகரியங்கள் மற்றும் உரிமைகள் மீறப்படல் உட்பட்ட முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளுதலும் அது தொடர்பில் விசாரணை செய்து பயணிக்கும் மக்களின் நலன் கருதி நியாயமான தீர்ப்பினைப் பெற்றுக் கொடுத்தலும் பொதுமக்கள் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவிற்குரிய பணியாகும்.

■ நடமாடும் பரிசோதனை மற்றும் விசாரணைப் பிரிவு

1991 இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்திற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள பேருந்துகள் தொடர்பில் இடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறுதல் குறித்து பரிசோதனை செய்தல் நடமாடும் பரிசோதனைப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றது.

மேலும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அரசாங்க உதவித்தொகையுடன் செயற்படுத்தப்படும் 'சிசு செரிய' பாடசாலை பேருந்துச் சேவை மற்றும் 'நிசி செரிய' இரவுப் பேருந்துச் சேவை ஆகிய சேவைகளைக் கண்காணிக்கும் பணியும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதன் படி 2015 திசெம்பர் 31ஆந் திகதியாகையில், நடமாடும் பரிசோதனைப் பிரிவினால் மாகாணங்களுக்கு இடையிலான 20570 பேருந்துச் சோதனையிடல்களும் 375 சிசு செரிய பேருந்துச் சோதனையிடல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

■ உள்ளகத் தகவல்கள் தொழில்நுட்பத் தொகுதி

மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்துச் சேவைகளுக்குரிய தகவல்களைப் பொர்துப் பயணிகளுக்குப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அனுமதிப்பத்திரதாரிகளை அறிவுறுத்தும் பொருட்டு உரிய பிரிவுகள், அலகுகள் மூலம் அனுப்பப்பட்ட தகவல்களை அரச நியமங்களுக்கு இணங்குமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வலைத்தளத்தில் பதிவேற்றியுள்ளது. இதன் மூலம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வலைத்தளத்தில் காணப்படும் தகவல்களை இற்றைப்படுத்தல் மற்றும் புதிய தகவல்களைத் தேடுதலை எளிதாக்கும் விதத்தில் எளிய முறைமைகள் 2013ஆம் ஆண்டினுள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்க மேலதிகமாக 2015 ஆண்டினுள் உள்ளக தகவல்கள் தொகுதி மூலம் தினமும் வரவினைக் குறியிடும் விரல் அடையாளத் தரவுகள் புதிய Database server இன் கீழ் நிறுவுதல் மற்றும் பேணுதல், புதிய proxy ளநசளநசளஜ நிறுவுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2015.12.31ஆந் திகதியாகையில் 0.29 மி.ரூ. திரண்ட செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

■ பணியாளர் பயிற்சியும் அபிவிருத்தியும்

பணியாளர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றை விருத்தி செயவதன் மூலம் நிறுவனத்தின் ஒட்டுமொத்த பணிகளின் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு துறைகளில் உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறிகளுக்கு பணியாளர்கள் அனுப்பப்படுகின்றனர்.

2015.12.31ஆந் திகதியாகையில் 3.60 மி.ரூ. திரண்ட செலவு இதற்காக மேற்கொள்ளப் பட்டுள்ளது.

- **பேருந்துகளைப் பௌதிக ரீதியாகப் பரிசோதித்தல்**

மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்து சேவைக்காக ஈடுபடுத்துவதற்கு ஏதேனும் பேருந்தொன்றினை முற்படுத்தியதும், காணப்படும் நிபந்தனைகளின் கீழ் பயணிகள் போக்குவரத்திற்காக உரிய பேருந்தில் காணப்படும் தகுதியினைப் பௌதிக ரீதியாக பரிசோதனை செய்து அறிக்கை ஒன்றினை வெளியிடுதல் இவ்வலகின் பொறுப்பாகும்.

# 5. தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்

## 5.1 அறிமுகம்

1997 இன் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவக அதிகாரச்சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டது. நிறுவன பிரதான இலக்கினை அடைந்து கொள்வதற்காக தலைமை அலுவலகம் உட்பட இருபத்தைந்து (25) கிளை அலுவலகங்கள் நாடளாவிய ரீதியில் தாபிக்கப்பட்டன.

இலங்கையிலுள்ள கனரக வாகனங்கள் உட்பட இலகுரக வாகனச் சாரதிகளின் சுகாதார நிலைமை தொடர்பாக உயர்ந்த மற்றும் தரம் வாய்ந்த மருத்துவ பரிசோதனையை மேற்கொண்டு, அதன் பிரகாரம் தரமான மருத்துவ சான்றிதழொன்றை வழங்குவதற்காக தலைமை அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்கள் மூலம் தேவையான சேவைகளை வழங்கி வருகின்றது.

### தொலைநோக்கு

"ஒவ்வொரு சுக்கானுக்குப் பின்னாலும் சுகதேகியான சாரதியை உட்கார வைத்தல்"

### பணி

"இலங்கையில் போக்குவரத்து மருத்துவ துறையில் முன்னோடியாக சகல சாரதி அனுமதிபத்திர விண்ணப்பதாரிகளுக்கு கல்வசார்ந்த மற்றும் தரமான சிறந்த மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டு உடல் மற்றும் உள ரீதியான தகைமை தொடர்பாக உறுதிப்படுத்தல்"

## 5.2 இலக்கு

i. கனரக சாரதி அனுமதிப்பத்தித்திற்காக மருத்துவ தகைமையை பரிந்துரைப்பதற்காக சகல விண்ணப்பதாரிகளினதும் உடல் உள தகைமையைப் பரிசோதித்தல்.

ii. வழங்கப்படுகின்ற மருத்துவ சான்றிதழ் சிறப்பானதாகவும் பாதுகாப்பானதாகவும் இருக்க தந்திரோபாயங்களை மேம்படுத்தல்.

iii. சிறந்த மனித வள முகாமை ஊடாக சேவைகளின் சிறந்த நிலைமையை அடைந்துகொள்ளல்

## 5.3 நிறுவனத்தின் செயற்பாடுகள்

(அ) கனரக வாகன சாரதிகள் உட்பட அனைத்து வகையான மோட்டார் வாகனங்களை செலுத்துகின்ற அல்லது ஓடுகின்ற சாரதிகளுக்கும் ஓட்டுனர்களுக்கும் மருத்துவ சேவைகளை வழங்குதல்.

(ஆ) கனரக வாகனங்கள் உட்பட அனைத்து வகை மோட்டார் வாகனங்களின் சாரதிகளையும் ஓட்டுனர்களையும் பரீட்சித்து அச்சாரதிகளுக்கும் ஓட்டுனர்களுக்கும் உடல் மற்றும் உளத் தகைமை தொடர்பாக சான்றிதழ்களை வழங்குதல்

(இ) கனரக வாகனங்கள் உட்பட அனைத்து வகை வாகனங்களின் சாரதிகள் மற்றும் ஓட்டுனர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவர்களின் தகைமை மற்றும் பொறுத்தப்பாடு தொடர்பாக பரிந்துரை வழங்கல்கள்

(ஈ) எந்த வகையான மோட்டார் வாகனங்களுக்குரிய விபத்துக்கள் மற்றும் தொடர்புடைய சந்தர்ப்பங்களின் போது மருத்துவ சேவைகளை அளித்தல்.

(உ) அனைத்து வகைகளுக்குரிய மோட்டார் வாகனங்கள், உடல் மற்றும் உள தகைமை மற்றும் திறமையானர்களால் மட்டும் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படுகின்ற அல்லது ஓடப்படுவது தொடர்பாக நிறுவகத்தினால் அல்லது முகவர்களிடம் விசாரித்து அல்லது பொறுப்பேற்றுக் கொள்ளல்.

(ஊ) தொழில்நுட்ப சந்தர்ப்பம் மற்றும் தொழில்நுட்ப விபத்துக்கள் தொடர்பாக மருத்துவ ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்குதல்.

(எ) உரிய நடைமுறைப்படுத்தல் அதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய மற்றும் செயற்படக்கூடியதுமான போக்குவரத்து மருத்துவ நடவடிக்கைகளின் நியமங்களை தயாரித்தலும் வரையறுத்தலும்.

## 5.4 தற்போதய செயலாற்றுகை

- பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக இரண்டு தலைவர்கள் செயற்பட்டதுடன், இயக்குனர் சபையின் வழிகாட்டல் அடிப்படையில் 2013 யூலை வரையிலும் இந்நிறுவனத்தின் பிரதான இலக்கான சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பதாரிகளின் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு மருத்துவ சான்றிதழ்களை வழங்குதல் தொடர்பான பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

**2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரை**

| மருத்துவப் பரிசோதனைகளை நடாத்திய குழு / மாவட்டம் | மேற்கொள்ளப்பட்ட மருத்துவ மொத்த பரிசோதனைகளின் எண்ணிக்கை | சுகாதாரக் காரணி களின் அடிப்படையில் மருத்துவப் பரிசோதனையில் தேர்ச்சி யடையாத சாரதிகள் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை | தேர்ச்சியடையாத சாரதிகள் மற்றும் அனுமதிப்பத்திரங்களை யுடைய விண்ணப்பதாரிகள் சதவீதம் |
|---|---|---|---|
| தலைமை அலுவலகம் | 92,143 | 4,914 | 5.33 |
| கண்டி | 42,026 | 4,429 | 10.54 |
| காலி | 28,521 | 2,603 | 9.13 |
| குருநாகல் | 64,065 | 3,955 | 6.17 |
| அநுராதபுரம் | 37,170 | 4,179 | 11.24 |
| ஹம்பாந்தோட்டை | 31,507 | 1,968 | 6.25 |
| இரத்தினபுரி | 28,367 | 1,297 | 4.57 |
| பதுளை | 23,430 | 1,848 | 7.89 |
| மொனராகலை | 16,286 | 1,168 | 7.17 |
| அம்பாறை | 18,807 | 941 | 5.00 |
| மட்டக்களப்பு | 20,104 | 1,146 | 5.70 |
| வேரகர | 65,827 | 8,815 | 13.39 |
| மாத்தறை | 21,051 | 1,596 | 7.58 |
| வவுனியா | 9,750 | 995 | 10.21 |
| மன்னார் | 3,846 | 216 | 5.62 |
| திருகோணமலை | 14,844 | 1,860 | 12.53 |
| கிளிநொச்சி | 7,590 | 665 | 8.76 |
| யாழ்ப்பாணம் | 21,798 | 2,465 | 11.31 |
| கம்பஹா | 72073 | 4560 | 6.33 |
| களுத்துறை | 29,860 | 1,323 | 4.43 |
| மாத்தளை | 20,836 | 2,171 | 10.42 |
| கேகாலை | 22,068 | 1,606 | 7.28 |
| முல்லைதீவு | 5,806 | 539 | 9.28 |
| நுவரெலியா | 12,334 | 1,089 | 8.83 |
| பொலன்னருவ | 16,353 | 1,504 | 9.20 |
| புத்தளம் | 20,382 | 732 | 3.59 |
| **மொத்தம்** | **746.844** | **58.584** | **7.84** |

■ 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட வைத்திய பரிசோதனைகளின் எண்ணிக்கை 746,844 ஆக இருந்தன. அதன் மூலம் 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சுகாதாரக் காரணிகள் காரணமாக சாரதித் தொழிலில் ஈடுபடுவதற்கு பொருத்தமற்றவர்களாக வைத்தியர்களால் தீர்மானிக்கப்பட்ட அளவு 7.84% ஆக

இருந்தது. அதாவது பரிசோதனைக்காக தோன்றிய ஒவ்வொரு 100 பேருக்கும் 7-8 இடைப்பட்ட அளவில் சுகாதாரக் காரணிகள் காரணமாகவே வாகனம் ஓட்டுவதற்கு பொருத்தமற்றவர்களாக இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

அதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வைத்திய பரிசோதனைகளின் எண்ணிக்கை 36.09% சதவீத்தினால் அதிகரித்திருந்தன.

2015 ஆம் ஆண்டில் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனைகளின் எண்ணிக்கை 75% அண்மித்த அளவு இலகுரக வாகனங்களுக்காக இருந்தது.

- தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்திற்கு பொலிஸ் திணைக்களத்திடமிருந்தும் நீதிமன்றங்களிலிருந்தும் தொடர்புபடுத்தப்பட்ட சேவைநாடுனர்களின் சதவீதத்தின் பிரகாரம் 7% - 8% இற்கு இடைப்பட்ட சதவீதத்தினர் வாகனங்களை ஓட்டுவதற்காக உடல் உள தகைமைகளை கொண்டில்லாதவர்களாக இனங்காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சுகாதார ரீதியில் தகுதியற்ற சாரதிகள் ஓட்டத்தில் ஈடுபடாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக நாம் செயற்படுவதினூடாக வீதி விபத்துக்களை குறைப்பதற்கு பங்களிப்பு செய்யப்படுகின்றது.

**பொலிஸ் திணைக்களத்திடமிருந்தும் நீதிமன்றங்களிலிருந்தும் மருத்துவ பரிசோதனைகளுக்காக தொடர்புபடுத்தப்பட்ட எண்ணிக்கை**

| ஆண்டு | 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரை | | | 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரை | | |
|---|---|---|---|---|---|---|
| மாதம் | சேவை நாடுனர்களின் எண்ணிக்கை | சித்தி பெறாத வர்கள | சித்தி பெறாதவர் களின் சதவீதம் % | சேவை நாடுனர்களின் எண்ணிக்கை | சித்தி பெறாதவர் கள் | சித்தி பெறாதவர் களின் சதவீதம் % |
| சனவரி | 252 | 17 | 6.75 | 185 | 19 | 10.27 |
| பெப்ரவரி | 196 | 17 | 8.67 | 197 | 16 | 8.12 |
| மார்ச் | 214 | 17 | 7.94 | 220 | 13 | 5.91 |
| ஏப்ரல் | 196 | 10 | 5.10 | 145 | 17 | 11.72 |
| மே | 209 | 14 | 6.70 | 224 | 24 | 10.71 |
| யூன் | 245 | 33 | 13.47 | 246 | 13 | 5.28 |
| யூலை | 271 | 18 | 6.64 | 254 | 16 | 6.30 |
| ஆகஸ்ட் | 250 | 26 | 10.40 | 228 | 19 | 8.33 |
| செப்தெம்பர் | 266 | 29 | 10.90 | 261 | 17 | 6.51 |
| ஒக்தோபர் | 269 | 21 | 7.81 | 248 | 27 | 10.89 |
| நவம்பர் | 210 | 17 | 8.10 | 243 | 14 | 5.76 |
| திசெம்பர் | 195 | 17 | 8.72 | 230 | 13 | 5.76 |
| **மொத்தம்** | **2773** | **236** | **8.51** | **2681** | **208** | **7.75** |

- மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள முன்னர் மருத்துவ பரிசோதனைக்கு உட்படும் நபரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். ஆதலால் போலியான நபர்கள் தோன்றுவதை தவிர்க்கும் நோக்கில் மருத்துவ அறிக்கையில் புகைப்படமொன்றை உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்நடவடிக்கைகளை பாதுகாப்பதற்காக சேவை நாடுனரின் புகைப்படமொன்றை இணையத்தளத்துடன் அண்மித்ததாக அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தலைமை அலுவலகம் மற்றும் அனைத்துக் கிளைகளிலும் செயற்படுத்தப்படுகின்றது.

- மேலும் சேவை நடவடிக்கைகளை கணனி மயப்படுத்தலும் இதுவரையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடன் இணையத்தளத்திற்கு உட்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அதற்குத் தேவையான சேர்வர் அறையொன்றும் தாபிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தில் காணப்படும் இடவசதிகளை மேம்படுத்துவதற்கும் ஊழியர்களுக்கு பல்வேறு நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளது.

    - நிறுவகத்தில் காணப்படும் இடவசதிகளை உயர் அளவில் பயன்பாட்டிற்கு எடுத்து சேவை நாடுனர்களுக்கு வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான வசதிகளை வழங்குதலும், தனியார் நிறுவனமொன்றின் வெண்டுகோளின் பேரில் இடவசதிகளை வழங்குதலும் முன்னைய ஆண்டைப் போல மேற்கொள்ளப்பட்டது. அதன் மூலம் நிறுவகத்தின் மேலதிக வருமானத்தை அதிகரிக்க கூடியதாக இருந்தது.

    - செயற்திறனான சேவையொன்றை வழங்குவதற்கு ஊழியர்களை குறித்த நேரத்திற்கு வேலைக்குச் சமூகமளிப்பது மிகவும் முக்கியம் வாய்ந்தமையால் அது தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு கிளை அலுவலகங்களில் கைவிரலடையாள இயந்திரங்களை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

    - சேவை நாடுனர்களுக்கு வினைத்திறனான சேவைகளை வழங்குவதற்காக தலைமை அலுவலகம், வேரஹர மற்றும் கம்பஹா கிளை மு.ப 7.30 மணிக்கு ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

## 5.5 நிறுவகத்தின் வருமான மற்றும் செலவின நிலைமை. (2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரை)

| மாதம் | வருமானம் (ரூபா) | மீண்டெழும் செலவினம் (ரூபா) | மூலதனச் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|
| சனவரி | 36,237,496.24 | 21,920,735.26 | 2,707,361.50 |
| பெப்ரவரி | 41,892,263.09 | 20,456,806.91 | 4,861,332.13 |
| மார்ச் | 48,883,660.94 | 34,923,065.97 | 214,109.10 |
| ஏப்ரல் | 34,190,941.60 | 20,314,556.84 | 2,864,526.52 |
| மே | 45,552,204.19 | 21,482,266.59 | 1,696,848.20 |
| யூன் | 50,401,147.87 | 24,338,474.69 | 1,247,265.45 |
| யூலை | 52,957,797.56 | 24,466,997.44 | 1,970,857.33 |
| ஆகஸ்ட் | 48,391,393.41 | 28,807,672.25 | 1,919,355.56 |
| செப்தெம்பர் | 59,027,787.62 | 33,010,041.43 | 7,214,598.73 |
| ஒக்தோபர் | 55,046,184.98 | 24,167,825.71 | 2,076,296.03 |
| நவம்பர் | 48,605,898.72 | 27,535,441.52 | 8,250,129.40 |
| திசெம்பர் | 83,445,797.67 | 39,947,023.46 | 1,192,702.51 |
| **மொத்தம்** | **604.632.573.89** | **321.370.908.07** | **36.215.382.46** |

## 5.6 நிறைவேற்றப்பட்ட பொது செயற்பாடுகள்

01. 2015 ஆம் ஆண்டின் சர்வதேச மகளிர் தினம் தொடர்பில் 2015.03.15 ஆம் திகதி பெண்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்காக மருத்துவ சான்றிதழ்களை வழங்கும் வேலைத்திட்டமொன்று கம்பஹா மாவட்டத்தில் செயற்படுத்தியமை

02. மட்டக்களப்பு மாவட்டத்தின் வலது குறைந்தோருக்காக மருத்துவ சான்றிதழ்களை வழங்குவதற்ககாக 2013.03.26 ஆந் திகதி நடமாடும் சேவையொன்றை நடாத்தப்பட்டது.

03. மொனராகலை மாவட்டத்தின் கொமாண்டோ ரெஜிமென்ட் பயிற்சி பாடசாலையில் படைத்தரப்பினருக்கு சாரதி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள முன்னர் மருத்துவ பரிசோதனையொன்று மேற்கொள்வது தொடர்பாக 2015.06.28 இல் நடமாடும் சேவையொன்றை நடாத்தப்பட்டது.

04. மொனராகலை மாவட்டத்தினுள் 2015 யூன் மாதம் 27, 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் புதிய சாரதி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பித்தல் என்பவற்றிற்காக மருத்துவ சான்றிதழ்களை வழங்கும் நடமாடும் சேவையொன்றை நடாத்தப்பட்டது.

# 6. சிவில் விமான சேவை அதிகார சபை

## 6.1 அறிமுகம்

1946 ஆம் ஆண்டு தொடக்கம் இருந்த சிவில் விமான சேவைத் திணைக்களம் ஒழிக்கப்பட்டு 2002 இலக்கம் 34 கொண்ட சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தின் மூலம் 2002 டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை நிலையியற் சபை நிறுவமாகத் தாபிக்கப்பட்டது. இது இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 154 வது வாசகத்தின் கீழ் உரிய கணக்காய்வுப் பணிகளுக்காக அரசின் நிலையியற் சபையாகக் கருதப்படுகின்றது. சிவில் விமான சேவை அதிகார சபை 08 அங்கத்தவர்களைக் கொண்டமைந்துள்ளதுடன் இவர்களின் 5 பேர் சிவில் விமான சேவை விடயத்திறகுப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படுவதுடன் 03 பேர் உத்தியோக பூர்வ அதிகாரத்தின் மூலம் நியமனம் பெறுவர்.

### தொலைநோக்கு

“தேசிய பொருளாதார அபிவிருத்தக்காக பிரதான ஊக்கமளிக்கும் நிறுவனமாகச் செயற்படல்”

### பணி

“வியூகத் திட்டமிடல் மற்றும் பலம் பொருந்திய நிர்வாகத்தின் மூலம் சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்த ஒப்பளவுகளுக்கமைய பாதுகாப்பு மற்றும் வினைத்திறன்மிக்கதாக சிவில் விமான சேவைக் கைத்தொழிலை முன்னொடுப்பதும் அதற்கு அனுசரனைகளை வழங்குவதும்.”

## 6.2. நோக்கம்

- அரசாங்கத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள சிவில் விமான சேவை துறைக்குரிய சர்வதேச கட்டுப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதுடன் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளை நாளாந்தம் அமுல்படுத்தலும்
- தடைகள் / எல்லை விதிப்பின்றி இலங்கை விமான சேவையினை சர்வதேச அங்கீகாரத்திற்குட்படுத்தல்.
- சிவில் விமான சேவையின் பாதுகாப்பு வினைத்திறன் பல்வகைத்தன்மை மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.
- இலங்கை விமானத் தளத்தை இலங்கை பிரஜைகளின் நலனுக்காக உயர்ந்தபட்சம் பயன்படுத்தல்
- நாட்டின் பொருளாதார அபிவிருத்தி

- போட்டிகரமான நிலைமைகளினால் ஏற்படக்கூடியஎபொருளாதார வீணடிப்புக்களை தவிர்த்தல்.

- நபர்கள் மற்றும் பொருட்களின் பிரவேசம் உட்பட அசைவினை விருத்தி செய்தல்.

- சிவில் விமான சேவை துறையில் நம்பகத் தன்மைமிக்க செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

- சிவில் விமான சேவைத் துறையின் கல்வி

- சிவில் விமானப் பணிகளின் சகல துறைகளுக்கும் அனுசரனை வழங்குதல்.

- பொதுவான சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள்.

- சூழல் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.

## 6.3. செயற்சாதனைகள் (ஜனவரி – டிசம்பர் 2015)

- மீளாய்விற்குட்படுத்தப்பட்ட கால எல்லைக்குள் சிவில் விமான சேவை அதிகார சபையின் பணிகளின் முன்னுரிமை கொண்ட பிரதானமாக சர்வதேச விமான சேவை தரங்கள் மற்றும் பரிந்துரைகளின் நாட்டின் அமுல்படுத்துவதற்குரியதான விடயங்கள். மேலும் சிவில் விமான சேவை மேற்பார்வை பணிகளுக்குட்பட்டு சிவில் விமான சேவை கைத்தொழிலாளர்களின் உறுதிப்படுத்தல், சட்ட ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் அவர்களின் குறைபாடு உட்பட பின்னடைவுகளை நிவர்த்தி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் அக்கால எல்லைக்குள் நிறுவன மீள் கட்டமைப்பு செயற்பாடுகளுக்குரிய பணிகளைப் போன்று பணியாளர் சபைப் பயிற்சிகள் ஊடாக நிறுவனக் கொள்ளவினை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

- உள்ளக விமான நிலைய அபிவிருத்திக்குரியதான இலங்கை விமானப் படை மற்றும் விமான நிலையங்கள் உட்பட விமான சேவை (இலங்கை) கம்பனியுடனான அனுசரனையுடன் உள்ளக விமானச் செயற்பாட்டாளர்கள் மற்றும் விமானப் பயிற்சிப் பாடசாலைகளில் விமானங்களை நிறுத்தி வைக்கும் வசதிகளை விருத்தி செய்தல் உட்பட இரத்மலானை விமான நிலையத்தை அபிவருத்தி செய்யும் பணிகளை மேற்கொள்வதன் ஊடாக விமானப் பணிகள் மற்றும் விமான சேவை (இலங்கை கம்பனியுடன் தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. விசேடமாக உள்ளக விமானச் செயற்பாட்டாளர்களுக்காக மிகுந்த நெகிழ்வுத் தன்மைகளுடான மிகுந்த போக்குவரத்து பயன்பாடுகளை அமுல்படுத்தும் வகையில் அமைச்சு மட்டத்தில் உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. உலங்கு வானூர்தி நிலையத்தை இலங்கையில் தாபிப்பதற்கான உரிய தரங்களை வழங்கும் செயற்பாடுகளும் மீளாய்விற்குட்படுத்தப் பட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

- 2015 ஆம் ஆண்டு இறுதியில் இலங்கை விமானச் செயற்பாட்டினை உறுதிப்படுத்தும் 09 பேர்களின் செயற்பாட்டுப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுனர். இச்செயற்பாட்டு

இரு பணியாளர்கள் சர்வதேச விமானப் போக்குவரத்துப் பணிகளுக்கமைய செயற்பாட்டாளராக சர்வதேச சரக்குப் பொருள் கொண்டு செல்லும் பணிகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 06 பேர்களுக்காக உள்ளக விமானச் செயற்பாடுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டன.

- புதிய வெளிநாட்டின் 05 விமான செயற்பாட்டுக் கம்பனிகளுக்காக விமானச் செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதன் மூலம் சர்வதேச விமானப் போக்குவரத்தினை முன்னேற்றுவதற்குப் பங்களிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. சர்வதேச 24 விமானக் கம்பனிகளின் 43 கேந்திர நிலையங்கள் வரை கட்டுநாயக்காவில் இருந்து விமானங்கள் மற்றும் மத்தளை ராஜபக்' விமான நிலையத்தை பயன்படுத்தியும் விமானப் போக்குவரத்துக்குப் பயனபடுத்தப்பட்டன.

- விமானச் செயற்பாட்டுக் கம்பனியில் உறுதி செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் காணப்பட்ட தரங்கள் அதேவாறு முன்னெடுப்பதனை உறுதிப்படுத்துவதற்கான மேற்பார்வை கணக்காய்வு, ராம் பரிசோதனை, விமானப் போக்குவரத்தில் இடம்பெறும் பரிசோதனை, பிரதான செயற்பாட்டு மத்திய நிலையப் பரிசோதனை, பிரதான கேந்திர மத்திய நிலையப் பரிசோதனை, விமான தகவல் சேவை பரிசோதனை, விமான போக்குவரத்து கட்டுப்பாட்டுப் பரிசோதனை, விமான தளப் பரிசோதனை உட்பட 344 பரிசோதனைகள் மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

- சிவில் விமான சேவை அதிகார சபையின் பிரதான பொறுப்பாக அமைவது நாட்டின் விமான சேவைக் கைத்தொழில் தொடர்ச்சியாக பாதுகாப்பு செயற்சானையை பேணுவதற்கான விமானத் தகைமை பிரிவாக விமானப் போக்குவரத்து செயற்பாட்டாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு ஏற்பாடுகள் மற்றும் தனிநபர் அல்லது நிறுவனம், அந்நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள், பழுது பார்ப்புக்களை மேற்கொள்ளல் விமானம் மற்றும் அதன் உள்ளீட்டுப் பராமரிப்புக்கள் உட்பட உரிய நபர்கள் பயிற்சியளித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும்.

- விமானத் தகைமைக்குரியதான மேற்பார்வை பணிகளாக புதிய பராமரிப்பு இரு அமைப்புக்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் உறுதிப்படுத்தப்பட்ட 60 அமைப்புக்களின் சான்றிதழ்கள் புதுப்பிக்கப்பட்டன. புதிய 11 விமானங்கள் பதிவு செய்யப்பட்டதுடன் 63 விமானங்களின் பதிவுகள் புதுப்பிக்கப்பட்டன. 75 விசாரனைகள் நடாத்தப்பட்டதுடன் விமானத் தகைமைச் சான்றிதழ் 11 வெளியிடப்பட்டது. 55 புதுப்பிக்கப்பட்டன. விமான சேவை சார்ந்த 112 சம்பவங்கள் தீர்க்கப்பட்டன.

- விமானப் பாதுகாப்புத் துறையின் விமானங்கள், விமானப் பராமரிப்பு மற்றும் விமானக் கட்டுப்பாடு போன்ற விமானப் போக்குரத்துப் பணிகளில் ஈடுபடும் நபர்கள் அனுமதிப்பத்திரம் வழங்குவது அவர்களின் இயலுமைகளை மேற்கொள்வது மற்றமொரு பிரதான பணியாகும்.

- தனிநபர் அனுமதிப் பத்திரங்களை வழங்கும் செயற்பாடுகளுக்கு, பயிற்சி நிறுவனம்

மற்றும் பயிற்சி காரணிகளை அங்கீகரித்தல் உட்பட உரிய பரீட்சைகளை நடாத்துதல், தேவையான ஆலோசனை மற்றும் பரிசோதனைகளை அனுமதித்தல், எழுத்து மூல மற்றும் பிரயோகப் பரிட்சை உட்பட வைத்திய பரிசோதனைகளை நடாத்துதல் போன்றன அடங்குகின்றன. மேற்கூறப்பட்ட ஒரு சில பணிகளுக்காக அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- மீளாய்விற்குட்படுத்தப்பட்ட காலத்திற்குள் பயிற்சி முன்னோடி அனுமதிப்பத்திரங்கள் 86 உம், தனியார் முன்னோடி அனுமதிப்பத்திரங்கள் 52 உம், வர்த்தக முன்னோடிப் பத்திரங்கள் 26 உம், தொழில்சார் முன்னோாடி அனுமதிப் பத்திரங்கள் 32 உட்பட விமான அனுமதிப்பத்திரங்கள் உட்பட உறுதிப்படுத்தல்கள் 196 வழங்கப்பட்டுள்ளன. மேலும் சகல வகைகளுக்குரிய விமான 722 முன்னோடி அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன இதற்கு மேலதிகமாக 10 விமானப் பராமரிப்பு அனுமதிப்பத்திரங்களும் 08 விமானச் செயற்பாட்டு உத்தியோகத்தர்கள் அனுமதிப் பத்திரங்கள் மற்றும் 139 மண்டப ஊழியர் சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளன. அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்கும் செயற்பாட்டின் கீழ் விமானப் பராமரிப்புத் தனி நபர் அனுமதிப்பத்திரங்கள் 462 உம், விமான நிர்வாக அனுமதிப் பத்திரங்கள் 51 உம், மண்டப ஊழியர் சான்றிதழ்கள் 103 உம் வெளியிடப்பட்டுள்ளன.

- மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் வருடாந்த விசாரனை வேலைத்திட்டங்களுக் கமைய விமான சேவைப் பாதுகாப்ப வெலைதடடங்கள அமுல்படுத்தப்பட்டன.

- விமான சேவை விழமான பாதுகாப்புச் சேவை வழங்குனர்களை உறுதிப்படுத்த விமான நிலைய மற்றும் விமான சேவை (இலங்கை) கம்பனியுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. சேவை முகாமையாளர்கள் 09 பேரும், 55 பாதுகாப்பு சோதனையாளர்களும் உறுதிப்படுத்தப்பட்டதுடன் அப்பாதுகாப்புத் தேடுனர்கள் 444 பேர்களின் சான்றிதழ்கள் புதுப்பிக்கப்பட்டன.

- இலங்கையை போன்று வெளிநாட்டு விமானக் கம்பினிகளுக்காகவும் புதிய விமான பிரயாணங்ளை ஆரம்பித்து காம்போஜியாவுடன் இருதரப்பு விமான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. இது நாட்டின் பொருளாதார மற்றும் சுற்றுலாக் கைத்தொழிலுக்கு பயன்மிக்கதாக அமைந்தது.

- மீளாய்விற்குட்படுத்தப்பட்ட காலத்திற்கு விமானப் போக்குவரத்து சேவை வழங்குனர்கள் தொடர்பில் 67 விசாரனைகள் மேற்கொள்ளப்பட்ட சுற்றுலாக் கைத்தொழிலுக்குத் தேவையான சிறந்த அனுவபம் கொண்ட மானிட வளத்தை உருவாக்குவதற்காக சிவில் விமான சேவை அதிகார சபையினால் நடாத்தப்படும் ஆவன ஒதுக்கீடு மற்றும் கட்டணத்தைக் கணிப்பீடு செய்யும் பாடநெறியின் 10 வது பாடநெறி பூர்த்தி செய்யப்பட்டது. அங்கீகரிக்கப்படாத விமானப் போக்குவரத்து மற்றும் சுற்றுலா முகவர்களுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக 1999 மொன்றியல் இணக்கப்பாடு அங்கீகரிக்கப்பட்ட விமானப் பிரயாணி அழைத்துச் செல்வது தொடர்பில் விமானக் கம்பனிக்கு பொறுப்பளிக்கப்படும் நட்டஈட்டுக் கொடுப்பனவின்

பொறுப்பு இலங்கையில் அமுல்படுத்துவதற்காகத் தேவையான அடிப்படை சட்ட வரைபு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உப குழுவின் பரிசோதனைக்காக சமர்ப்பிக்கப்பட்டதுடன் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக நிரல் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

- சிவில் விமான சேவை அதிகார சபை எதிர்கால விமான சேவைக்குத் தேவையான ஆளனியினை விருத்தி செய்வதற்குத் தேவையான செயற்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. சிவில் விமான சேவை துறை தொடர்பான அறிவினை பாடசாலை மாணவர்களுக்கிடையே விருத்தி செய்வதற்காக சிவில் விமான சேவை அபிவிருத்தி மற்றும் கல்வி குழு தாபிக்கப்பட்டுள்ளது. இக்குழுவினால் பாடசாலை மாணவர்களின் விமான சேவைத் துறை தொடர்பான அறிவினை விருத்தி செய்யும் நோக்குடன் விமான சேவைக் கழகங்களை தாபித்தல், விமான சேவைத்துறையினை அறிமுகப்படுத்தும் வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன. அத்துடன் சிவில் விமான சேவை அதிகார சபை பாடசாலை மாணவர்களுக்கிடையே விமான சேவைத்துறை தொடர்பான அறிவினை விருத்தி செய்யும் நோக்குடன் "ருவன்சர" 03 மாதகால கல்வி சஞ்சிகை வெளியிடப்பட்டது.

- 2015 ஆம் ஆண்டின் இரண்டு வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் 2015 டிசம்பர் மாத இறுதியில் 584 விமான சேவைக் கழகங்களைத் தாபிக்க முடிந்தது.

- மறுசீரமைக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானங்களுக்கமைய சிவில் விமான சேவை அதிகார சபையின் பிரதான அலுவலக நிர்மானிப்பு அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் நிர்மானப் பணிகள் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய வளாகத்தில் 2015 டிசம்பர் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

## 6.4. தற்போதைய நலன்புரிப் பணிகள்

- நிறுவனப் பணியாளர் சபையின் நலன்புரிப் பணிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் வைத்தியக் காப்புறுதி தழுவலுக்காக ரூபா. 7.3 மில்லியன் தவணைக்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் வெளி வைத்திய வசதிகளுக்காக ரூபா 3.8 மில்லியன் நிதி மீளாய்விற்குட்படுத்தப்பட்ட காலத்திற்குள் 146 ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சிவில் விமான சேவை அதிகார சபைப் பணியாளர் சபைக்காக ரூபா. 0.8 மில்லியன் தவணைக் கொடுப்பனவு மூலம் விபத்துக் காப்புறுதியினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- இடர் கடனாக ரூபா 4.5 மில்லியன் ரூபா. 32 ஊழியர்களுக்கும் சொத்துக் கடனாக 1.9 மில்லியன் ரூபாவும் 2015 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக வாகனம் மோட்டார் சைக்கிள் முச்சக்கர வண்டி போன்றவற்றை கொள்வனவு செய்வதற்காக 13.4 மில்லியன் ரூபா நிதி 19 ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 6.5. மானிட வள அபிவிருத்திப் பணிகள்

புதிதாக 1000 ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளும் பணிகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டன. சிவில் விமான சேவை அதிகார சபையின் விடயப்பரப்பு உட்பட்ட அதன் விசேடமாக மானிட வளத் தேவையான அமைவது ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய பயிற்சி வேலைத்திட்டமாகும். இதன் போது தொழில் மற்றும் நிறைவேற்றுத் தர ஊழியர்களுக்காக தயாரிக்கப்பட்ட சில பயிற்சி வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தைப் பயன்படுத்தி வருடாந்தம் நிறைவேற்று உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. பொதுவாக நோக்கும் போது ஏனைய ஊழியர்களுக்காகவும் வருடாந்த பயிற்சி வேலைத்திட்டம் சகல ஆண்டுகளிலும் அதிகார சபையின் அங்கீகாரத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டது. மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டில் சர்வதேச விமான சேவைக் கைத்தொழிலுடன் கொடுக்கல் வாங்கல்களில், செயலமர்வுகளில் ஈடுபடுவதற்காக ரூா. 13.7 மில்லியனும், வெளிநாட்டு சந்திப்புகளுக்காக 14 பேர்களுக்கு 9 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டது. அத்துடன் வெளிநாட்டு ஆய்வுப் பணிகளுக்காகப் பங்பேற்ற பரிசோதகர்களுக்காக 04 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

சிவில் விமான சேவை அதிகார சபையின் நிறுவனத்தின் திட்டங்களை மீள் கட்டமைக்கும் செயற்பாடுகளின் கீழ் நிறுவனத்தின் புதிய பதவிக்குச் சேர்த்துக் கொள்ளும் செயற்பாடுகள் 2015 ஆம் ஆரம்பிக்கப்பட்டு ஏற்கனவே இது இடம்பெற்று வருகின்றது.

## 6.6 நிதி நிலைமைப் பகுப்பாய்வு

**2015 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை**





செலவினம்
2015 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை
நிர்வாகம் மற்றும் ஏனைய செலவினம்இ 125 இ 34மூ
தேய்மானம்இ 28 இ 8மூ
பணியாளர் சபைச் செலவினம்இ 187 இ 51மூ
பயிற்சிஇ 9 இ 2மூ
கூட்டம் ∴ செயலமர்வு ∴ கருத்தரங்குஇ 17 இ 5மூ




இலாபப் பகிர்வு
2015 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை
இலாபம்இ 866 இ 56மூ
செலவினம்இ 366 இ 23மூ
வருமான வரிஇ 325 இ 21மூ



இலாபப் பகிர்வு
2015 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை
பொதுத் திறைசேரிஇ 400 இ 46மூ
சிவில் விமான சேவை அதிகார சபைஇ 466 இ 54மூ
சிவில் விமான சேவை அதிகார சபை
பொதுத் திறைசேரி

# 7. இலங்கை விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி

## 7.1 அறிமுகம்

**செயல்நோக்கு**

ஆசிய பிராந்தியத்திலேயே செயற்திறனுடனும்,சிறந்த நட்புணர்வுடனும் முதல்நிலை விமானசேவை மையமாக திகழ்தல்".

**செயற்பணி**

நாம் அயரா உழைப்புடன் அனைத்து தொழிற்பாடுகளினூடாக போட்டியடிப்படையிலான வான் போக்குவரத்து வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குவதும், எமது தாபனத்தின் மீது அக்கறை காட்டும் தரப்பினர்களின் மனநிறைவினை உறுதி செய்வதேயாகும் ".

**தாபன தொழிற்பாடுகள் மற்றும் / செயற்பாடுகள்**

கொழும்பு வான் பயண தகவல் பிராந்தியத்திற்குள் விண்ணிலும், தரையிலும் விமானங்கள் மற்றும் பயணிகளின் பாதுகாப்பு உறுதிபடுத்தும் தீயணைக்கும் சேவைகள் மற்றும் பாதுகாப்பு சேவைகள் உள்ளடங்கலாக வானூர்தி சேவைகளை வழங்குதல் முனைய மற்றும் அதனுடன் தொடர்புடைய பயணிகளுக்கு வசதிகளை வழங்கும் நடவடிக்கைகளை பேணுவதும் கம்பனியின் பிரதான தொழிற்பாடுகளாகும்.

## 7.2 விமானநிலைய மற்றும் விமான போக்குவரத்துச் சேவைகள் பிரிவின் ஒட்டு மொத்த செயற்பாடு

- **பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் (ப.ச.வி)**

2014 ஆம் ஆண்டில் வரலாற்றிலே மிகவும் உயர் பெறுமதியாக பதிவுசெய்யப்பட்டுள்ள புள்ளி விபரங்களை தாண்டி சாதனை படைக்கும் வருடமாக 2015 ஆம் ஆண்டில் எமது தொழிற்பாட்டு மட்டத்திலான காட்டிகளாக பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் விமானப் போக்குவரத்து புள்ளிவிபரங்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தினைப் போன்று விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் வளர்ச்சியினையும் ஏற்படுத்தி கருதக்கூடியளவு அதிகரிக்கப்பட்டுள்ளன. அதிகரிக்கும் போக்கு பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

**விமான இயக்கங்கள்**

5மூ வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டு 2014 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 52,624 இற்கு எதிராக 2015.12.31 ஆந் திகதியிற்கு 55,248 அசைவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன

**பயணிகள் அசைவுகள்**

9.5 மூ வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டு 2014 ஆம் ஆண்டில் 7,766,491 ஆன பயணிகளின் அளவு 2015 ஆம் ஆண்டில் 8,503,066 வரையிலான வளர்ச்சியைப் பிரதிபலித்தது.

**வான் சரக்கு அசைவுகள்**

2014 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்டு 209,417 மெ. தொண் இற்கு நிகராக 2015 ஆம் ஆண்டில் 220,403 பதிவு செய்யப்பட்டு விமான அசைவுகளும் 2015 ஆம் ஆண்டில் 5மூ வளர்ச்சியைக் காட்டியது

- **மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் – மஇசவி**

2015 ஆம் ஆண்டில் மார்ச் மாதத்திலிருந்து தேசிய விமானசேவையின் நடவடிக்கைகளில் குறைக்கப்பட்டதனால் 2015 ஆம் ஆண்டில் மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமாநிலையத்தின் விமான அசைவுகளின் குறிகாட்டிகளில் சரிவு காணப்பட்டது.

**விமான இயக்கங்கள்**

மஇசவி இன் 2014 ஆம் ஆண்டில் கையாளப்பட்ட 2896 விமானங்களுக்கு நிகராக 2015 ஆம் ஆண்டில் விமானங்கள் (உள்நாடு மற்றும் சர்வதேச) 986 கையாளப்பட்டன.

**பயணிகள் அசைவுகள்**

2014 ஆம் ஆண்டில் 40,386 எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது 2015 ஆம் ஆண்டில் விமானநிலையத்தை கையாளப்பட்ட பயணிகள் (உள்நாடு மற்றும் சர்வதேச) எண்ணிக்கை 5,736 ஆகும்.

**வான் சரக்கு அசைவுகள்**

2014 ஆம் ஆண்டில் கையாளப்பட்ட 222 மெ. தொண் நிகராக 2015 ஆம் ஆண்டில் கையாளப்பட்ட மொத்த வான் சரக்குகளின் அளவு 19 மெ. தொண்களாகும்.

## 7.3 பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைத்தின் நவீன கருத்திட்டத்தின் மற்றும் மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் 11 ஆம் கட்டத்தின் முன்னேற்றம்

**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைத்தின் நவீன கருத்திட்டத்தின் முன்னேற்றம்**

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைத்தின் பயணிகளின் கையாளும் கொள்ளளவு 9 மில்லியன்களால் மேலும் அதிகரிப்பதும் உட்கட்டமைப்பு வசதிகள் விரிவாக்கம் செய்வதன் மூல் பயணிகளின் வசதிகளை ஏற்படுத்துவதே இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். இதன்

மூலம் வெளிநாடுகளுடன் தொடர்பை மேம்படுத்தப்படுவதுடன் முதலீட்டாளர்கள் மற்றும் உல்லாசப் பயணிகளை கவரும் நோக்கில் சர்வதேச விமானநிலைய பயணிகளுக்காக உயர் தரத்திலான வசதிகளை ஏற்படுத்தி பொருளாதார வளர்ச்சி மேம்படுத்துவது இடம் பெறும்.

முன்மொழியப்பட்ட அதி நவீன வசதிகளாலான பசவி முனையக் கட்டிடம் 2 சர்வதேச அளவில் பிரதிம்பம் வடிவமைக்கப்படுவதுடன் பல்வேறு சுற்றுச் சூழல் முயற்சிகள் மற்றும் வேறு திறமைகள் உள்ள நபர்களுக்கு தடங்களின்றி உட்பிரவேசிக்கும் வசதியிருப்பதனால் வருகையாளர்களுக்கு மறக்க முடியாத அனுபவங்கள் கிடைக்கின்றன.

மனங்கவரும் நவீன வடிவமைப்பு இலங்கையில் வளமான பண்பாடு மற்றும் பாரம்பரியத்தை பிரதிபலிக்கின்றதுடன், விமானநிலைய பார்வையாளர்களுக்கு மறக்க முடியாத அனுபவங்களை வழங்குகின்றன.

பல்வேறு மட்டங்களினாலான முனையக் கட்டிடத்தில் புறப்படும் பயணிகளில் 2 ஆவது மட்டத்திலும் வருகைத்தரும் பயணிகள் 1. ஆவது மட்டத்திலும் கையாளப்படும். முனையக் கட்டிடம் ஒரு சர்வதேச விமான நிலையமொன்றில் பாதுகாப்பு தேவைப்பாடுகளுக்கு இணங்குவதுடன் தாமதங்களின்றி மேற்கொள்ளப்படுகின்ற பயணப் பொதிகள் கையாளும் அமைப்புமுறை ஊஊவுஏ மூலம் நிறைவேற்றப்படுகின்ற உட்பிரவேச கட்டுப்பாடு அமைப்புமுறையாலானது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் 2015 ஆம் ஆண்டில் 8,500,000 பயணிகள் அளவை கடந்துள்ளதுடன் அது 8மூ வருடாந்த அதிகரிப்பாகும். 2020 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 15 மில்லியன் பயணிகள் கொள்ளளவை கையாளுவதற்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் 2 ஆம் கட்டம் 11 ஆவது நடவடிக்கை திட்டமிடப்பட்டதுடன் பல பெ றியியல் வடிவமைப்புகள், கட்டுமான ஒப்பந்ததாரர் சேவைகளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் நிறைவு செய்யப்பட்டன..

**மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் இரண்டாம் ஆம் கட்டத்தின் முன்னேற்றம்**

தற்போதைய அரசாங்கத்தின் முடிவுகளின் கீழ் மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் 11 ஆம் கட்டத்தின் கட்டுமானங்களின் ஆரம்ப திட்டங்களை முன்னெடுத்தல் மேலும் செல்லுபடியாக மாட்டாது.

மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் முதலீடுகளுக்கு மற்றும் வணிக நடவடிக்கைகளுக்காக விருப்பத்தை வெளிப்படுத்தும் கூற்றுக்காக (நுழுஐ) முன்மொழிவுகளை அழைப்பது தொடர்பாக அமைச்சரவை அனுமதி கிடைத்தது. முதலீடுகள் மற்றும் வணிக நடவடிக்கைகள் வகை குறிப்பிட்ட அல்லது வரையறுக்கப்படாததுடன், விமானநிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியின் அதன் முக்கிய வர்த்தக செயற்பாட்டு வாய்ப்புகளான விமான பேக்குவரத்துச் சேவை, தீயணைப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பகுதிகளில் அதன் முக்கிய வர்த்தக நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டுத்தியது.

## 7.4 எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள்

**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஓடுபாதை மேல்விரிப்பு தொடர்புடைய வேலைகள்**

1985 ஆம் ஆண்டு ஓடுபாதை விமானம் செயல்பாடுகளுக்காக திறந்து வைக்கப்பட்டதை பிரகடனப்படுத்திய நாளிருந்து இற்றைவரை ஓடுபாதையின் மிகப் பெரிய பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை. விமானத்தொழிற்பாடுகளின் பாதுகாப்பு மற்றும் சேவை ஆயுள் காலம் மேம்படுத்துவதற்கு சர்வதேச சிவில் விமான போக்குவரத்து அமைப்பின் மதியுரைகளின் பிரகாரம் விமான மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஓடுபாதை 2017 ஆம் ஆண்டில் மேல்விரிப்பு தொடர்புடைய கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய புறப்பாட்டு முனையத்தின் பயணப்பொதிகள் வகைப்படுத்தும் பிரதேசம் விரிவாக்கம் செய்தல்.**

பறப்பாட்டு மக்கள் திரள் ஒன்றுகூடும் மற்றும் சோதனையிடும் மண்டபங்களின் விரிவாக்கத்துடன் 2016 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் தாமதமின்றி பயணப் பொதிகள் திரையிடல் அமைப்புமுறை அறிமுகப்படுத்தப்படும். பயணிகள் செயலாக்க நேரம் துரிதப்படுத்த பொருட்டு குடியகல்வுத் கட்டுப்பாடு பகுதியில் முனைய கட்டிடத்தில் முதல் மாடிக்கு மாற்றப்படும்.

## 7.5 நிதி செயலாற்றம்

| | 2014 | 2015 |
|---|---|---|
| வருமானம் (ரூ.மி) | 13,742 | 15,235 |
| தொழிற்பாட்டுச் செலவு (ரூ.மி) | 9,422 | 9,589 |
| தொழிற்பாட்டு இலாபம் / நட்டம் (ரூ.மி) | 4,321 | 5,646 |
| மூலதனச்செலவு (ரூ.மி) | 1,234 | 555 |

## 7.6 ஏனைய அபிவிருத்திகள்

சிவில் விமாசேவைகள் பயிற்சி நிலையம் (CATC) TRAINAIR PLUS மீள மதிப்பாய்வு திருப்திகரமான விதத்தில் நிறைவுசெய்தது..

விவிசேக பயிற்றுவிக்கும் கிளை, சிவில் விமாசேவைகள் பயிற்சி நிலையத்தினூடாக (CATC) ICAO 2014 ஆம் ஆண்டில் TRAINAIR PLUS பூரண அங்கத்துவத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர்ஐஊயுழு மூலம் TRAINAIR PLUS பூரண அங்கத்துவத்திற்காக சகல 3 வருடங்களுக்கொருமுறை நடாத்தப்படும் மீள மதிப்பாய்விற்காக (CATC) 2015 ஓகஸ்ட் மாதத்தில் உட்படுத்தப்பட்டது. அதன்பெறுபேறாக சிவில் விமாசேவைகள் பயிற்சி நிலையத்தில் TRAINAIR PLUS பூரண அங்கத்துவம் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் வரை மீள புதுப்பிக்கப்பட்டது. TRAINAIR PLUSICAO மூலம் சிவில் விமாசேவைகள் பயிற்சி நிலையத்திற்கு வழங்கப்படும் உயர் அதிகாரமாகும். இந்த

நிறுவனத்தின் ICAO நிபந்னைகளுக்கு இயைவாக சாத்தியவள அடிப்படையிலான பயிற்சி (ஊடீவு) வழங்கமுடியுமான இயலுமை அறியத்தந்துள்ளது.. இதற்குமேலதிகமாக பூரண அங்கத்துவம், வழக்கமாக அதிகரிக்கும் விளைவுபெருக்கத்தையுடைய பயற்சித் தொகுப்பான TRAINAIR PLUS கருத்துக்களத்தில் நிறுவுவதற்கு உயர் தரத்திலான பயற்சி பாடநெறி அபிவிருத்தி நிறுவனத்திற்குள்ள இயலுமையை பிரதிபலிக்கின்றது. கருத்துக்களத்திலுள்ள இந்த பாடநெறிகளுக்கு அனைத்து அங்கத்தவர்களுக்கு மற்றும் குறித்த நிலையத்தில் இப்பாடநெறியை தேர்ந்தெடுக்கும் அல்லது பகிர்ந்தளிக்கும் யாதாயினுமொரு அங்கத்தவருக்கும் பிரவேசிக்க முடியும். இந்த வலையமைப்பினுள் இரு தடவைகள் முயற்சிப்பதைத் தவிர்ப்பதுடன் உயர் விளைபெருக்கத்துடனான ஏற்றுக்கொள்ளக்கூடிய பயிற்சி பாடநெறி அனைத்து அங்கத்தவர்களுக்கும் பெற்றுக்கொள்ள முடியும்.

**ஒஸ்டிரியா விமானசேவை இலங்கையில் விமானசேவைகளை ஆரம்பித்தல்**

8 வருடங்களுக்குப் பின்னர் 2015 ஒக்டோபர் மாதம் 28 ஆந் திகதி ஒஸ்டிரியா விமானசேவையானது தனது தொழிற்பாடுகளை ஒஸ்டிரியா மற்றும்கொழும்பு இடையே மீள ஆரம்பித்தது. இரு நாடுகளினதும் சிவில் விமான சேவைகள் அதிகாரகாரிகளின் இரு தரப்பு கலந்துரையாடல்களின் பின்னர் வியானா மற்றும் கொழும்பு இடையே பயணம்செய்யும் விமானத் தடவைகள் வாரத்துக்கு இரு தடவைகளென முடிவுசெய்யப்பட்டது. பல்வேறு ஒஸ்டிரியா சுற்றுலாப் பயணிகள் தனது விடுமுறை இலங்கைக்குள்ளே கழிப்பதற்கு விருப்பமாக உள்ளதால் இது இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் துறையில் பாரிய மேம்பாடாகவுள்ளது.

## 7.7 எதிர்பார்க்கப்படும் வினாக்கள் மற்றும் விவாதங்கள்

**எதிர்பார்புகள்**

**மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் விருப்பத்தை வெளிப்படுத்தும் கூற்று**

மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் விருப்பத்தை வெளிப்படுத்தும் கூற்று அழைப்பதற்கு எதிர்பார்த்தவாறு சரிவருமாயின் விமானநிலைய விமாசேவைகள் கம்பனியிற்கு மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் கடன்பளு தீர்த்துக்கொள்வதற்கு அல்லது குறைத்துக் கொள்வதற்கு இயலுமையாக அமையும்.

**வானோடல் மூலமல்லாத வருமானங்களின் சீரமைப்பு**

போட்டியடிப்படையிலான கேள்விப்பத்திர தொழிற்பாட்டினூடாக பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற அனுசரணையாளரிடமிருந்து ஈட்டப்படும் வருமானங்கள் உச்சப்படுத்தப்படும். பயணிகளின் பல்வேறு வகையிலான தேவைப்பாடுகளை பூர்த்திசெய்யக்கூடிய வகையில் தீர்வைகளற்ற கடைகளில் வைக்கப்படவேண்டிய உற்பத்திகள் எவையென புதிதாக முடிவுசெய்யப்படும்.

# 8. வரையறுக்கப்பட்ட லக்திவ எஞ்சினியரிங் (தனியார்) கம்பனி

## 8.1 அறிமுகம்

இந் நிறுவகத்தின் முக்கிய நோக்கம் யாதெனில் இ.போ.ச பஸ்களை குறைந்த செலவில் உயர் தரத்தில் பழுதுபார்த்து மக்கள் சேவைக்காக அணியிற் சேர்த்தல்.

**தொலைநோக்கு**

"இலங்கை மக்களுக்கு நல்ல கவர்ச்சிகரமான போக்குவரத்துச் சேவைக்கு உதவுதல்"

**பணி**

"இலங்கை போக்குவரத்துச் சபையினதும் தனியார் பஸ் உடைமையாளர்களினதும் பழுதடைந்த பயணி பஸ்களை சலுகை செலவில் உயர் தரத்தில் பழுதுபார்த்து சேவைக்குச் சேர்த்தல்"

## 8.2 2015 ஆம் ஆண்டில் நிருவாகம் ஈட்டிய முன்னேற்றம் (பௌதீக, நிதி)

| மாதம் | பஸ்தொகை | இ.போ.ச விடம் இருந்து கிடைத்த நிதி ரூ | உற்பத்திச் செலவு ரூ | நிறுவகத்திற்கு இலாபம் ரூ |
|---|---|---|---|---|
| யனவரி | 03 | 2,0654,797 | 1,682,095 | 382,702 |
| பெப்ரவரி | 02 | 1,710,613 | 1,388,098 | 322,515 |
| மார்ச் | 05 | 3,528,949 | 2,815,973 | 712,976 |
| ஏப்ரல் | 04 | 2,771,158 | 2,175,630 | 595,528 |
| மே | 02 | 431,492 | 342,045 | 89,447 |
| யூன் | 05 | 2,413,912 | 1,924,558 | 489,354 |
| யூலை | 05 | 3,237,939 | 2,217,895 | 1,020,044 |
| ஆகஸ்ட் | 05 | 2,968,046 | 2,049,863 | 918,183 |
| செப்டம்பர் | 04 | 4,088,478 | 2,844,325 | 1,244,153 |
| ஒக்டோபர் | 03 | 3,174,364 | 2,190,692 | 983,672 |
| நவம்பர் | 05 | 3,980,765 | 2,757,048 | 1,223,717 |
| டிசம்பர் | 06 | 4,278,401 | 3,121,954 | 1,156,447 |
| **மொத்தம்** | **49** | **34.648.918** | **25.510.180** | **9.138.738** |

## 8.3 உட்கட்டமைப்பு வசதிகள்

லக்திவ எஞ்சினியரிங் கம்பனியின் காணி அளவு ஏறத்தாழ 24 ஏக்கர்களாகும். இதற்குள் பல பட்டறைக் கட்டடங்கள் பரந்து கிடக்கின்றன. இலங்கை போக்கவரத்துச் சபைக்கு கடந்த காலத்தில் சகல பழுதுபார்த்தல்களும் (எஞ்சின்கள் தவிர) இப் பட்டறைகள் மூலமே செய்யப்பட்டன.

## 8.4 உற்பத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

முந்திய ஆண்டுகளில், பஸ் ஒன்றை முற்றாய்ச் செம்மைப்படுத்துவதற்கு 2.5 முதல் 3 மாதங்கள் வரை சென்றன. ஆனால் இக்காலவெல்லை தற்போது 1.5 மாதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. விபத்தில் சிக்கிய பஸ்கள் பழுதுபார்க்கப்படுவதற்கு செல்லும் 10-15 நாட்கள் தற்போது 05 நாட்களுக்குக் குறைக்கப்பட்டுள்ளது. குன்றும் குழியுமாயிருந்த வளவில் ஒழுங்கின்றி பழுதுபார்க்க முடியாது நிறுத்தப்பட்டிருந்த பஸ்கள் தற்போது வளவின் ஒரு பக்கத்தில் நேர்த்தியாக நிறுத்தப்பட்டு வளவு விரும்பத்தக்கவொரு பகுதியாக மாறியுள்ளது.

## 8.5 முன்னேற்றம்

35 ஆண்டுகள் பழைமை வாய்ந்த இயந்திரங்களுக்குப் பதில் புதிய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பழுதுபார்த்தல் அதிகமாகவும் வினைத்திறனுடனும் நடைபெறுகிறது. அதி உல்லாச யூடோங் பஸ்கள் விபத்து பழுதுபார்த்தல்கள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.